பக்கங்கள் : பன்னிரண்டு+II

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 02 வியாழக்கிழமை (18.09.2008)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 295

## வன்னியில் யுத்த சூனிய வலயங்களைப் பிரகடனப்படுத்த இலங்கை அரசை வலியுத்துகிறது மனித உரிமை ஆணைக்குழு

கொழும்பு, செப். 18

வன்னியில் இடம்பெயரும் மக்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு யுத்த சூனிய வலயங்களை பிரகடனப்படுத்த வேண்டும்.

ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழு மேற்கண்ட கோரிக்கையை இலங்கை அரசிடம் விடுத்துள்ளது.

ஹொங்ஹொங்கை தளமாகக் கெண்டு இயங்கும் இவ்வமைப்பு, நேற்று இந்தக் கோரிக்கையை இலங்கை அரசிடம் விடுத்துள்ளதாக அதன் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

வன்னியில் இடம்பெயரும் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்.

கிளிநொச்சியில் தங்கியிருக்கும் மக்களின் பாதுகாப்பை இலங்கை அரசாங்கம் உறுதி செய்தாக வேண்டும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# விஷவாயு ஆயுதங்களைப் புலிகள் பாவித்ததாக படையினர் குற்றச்சாட்டு

## எதிர்கொள்ளத் தயார் என்றும் தெரிவிப்பு

கொழும்பு,செப்ரெம்பர் 18

வன்னியில் நடைபெற்று வரும் போரில், விடுதலைப் புலிகள் விஷவாயு ஆயுதங்களை பயன்படுத்தியதாக இராணுவத் தரப்புக் குற்றஞ்சாட்டியுள்ளது.

கிளிநொச்சியில், அக்கராயன் மற்றும் வன்னிவிளாங்குளம் பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களின் போது விடுதலைப் புலிகள் மூச்சுத் திணறல் உண்டாக்கக் கூடிய C.S.GAS எனப்படும் விஷ வாயுவைக் கக்கும் கிரனேட் குண்டுகளைக் கொண்டு படையினர் மீது தாக்குதல்களை நடத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார நேற்றுத் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## 'நியாப்' பொறியியலாளரான இளம் பெண் சுட்டுக்கொலை

கொழும்பு, செப்.18

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி தேத்தாதீவுப் பகுதியில் இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உதவிப் பொறியியலாளரான பெண் ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நியாப் திட்டத்தின்கீழ் உதவிப் பொறியியலாளராக கடமை புரிந்த யோகேஸ்வரன் பிரேமலதா (வயது 28) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார். இவர் ஒரு குழந்தையின் தாயாவார்.

சம்பவ தினம் காலையில் அவருடைய வீட்டிற்குச் சென்ற இரு இனந்தெரியாத நபர் கள் அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றனர் என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (அ-சி)

உள்ளே →
க.பொ.த.ப (சாதாரண தர) பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாள்
ENGLISH ( Part I+II)

## கஞ்சிகுடிச்சாறில் நேற்றும் அதிரடிப்படை மீது தாக்குதல்

அம்பாறை, செப். 18

அம்பாறை, கஞ்சிக்குடிச்சாறு வனப் பகுதியில் நேற்றுக்காலை 6.10 மணியளவில் சுற்றுக்காவலில் ஈடுபட்ட விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகளால்மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் படையினர் நால்வர் உயிரிழந்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கறம்பைக்குளம் பகுதி இப்போது தம்வசம் என்கிறது இராணுவம்

கொழும்பு, செப். 18

கிளிநொச்சி மாவட்டம், நாச்சிக்குடாவிற்கு வடகிழக்கில் நேற்றுப் பிற்பகல் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே கடும் சமர் நடைபெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சமரின்போது விடுதலைப் புலிகளிடமிருந்து கறம்பைக்குளம் அணைக்கட்டுப் பகுதியை படையினர் கைப்பற்றியுள்ளனர் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதன்போது 25 புலிகளும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரச விமானங்கள் நேற்று வட்டக்கச்சியில் தாக்குதல்

கிளிநொச்சி, செப். 18

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வட்டக்கச்சியில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் குடியிருப்புகள் மீது நேற்றுக்காலை விமானப்படையினரின் தாக்குதல் விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின. இந்தத் தாக்குதலில் சிறுவன் ஒருவன் உட்பட இருவர் படுகாயமடைந்தனர். ஒரு வீடு மற்றும் நான்கு தற்காலிக குடிசைகள் முற்றாக அழிக்கப்பட்டன என்று அங்கிருந்து கிடைக்கும் தக

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு இராணுவ உதவி வழங்கும் மத்திய அரசைக் கண்டித்து ரயில் மறியல்

சென்னை, செப். 18

எமது சகோதரர்களான ஈழத்தமிழர்களைக் கொன்றொழித்துவரும் இலங்கை அரசுக்கு ஆயுதத் தளபாடங்களை வழங்குவது மற்றும் ராடர் உள்ளிட்ட கருவி களை வழங்கி இராணுவத்தினருக்குப் பயிற்சியளிப்பது போன்ற உதவிகளை செய்துவரும் மத்திய அரசைக் கண்டித்து, எதிர்வரும் 23ஆம் திகதி ரயில் மறியல் போராட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களால்

# கிளிநொச்சி புற நகரப் பகுதிகளிலிருந்து 6,500 குடும்பங்கள் கண்டாவளைக்கு இடம்பெயர்வு

## நிவாரண உதவிகளை வழங்குவதில் பெரும் சிரமங்கள்

கிளிநொச்சி, செப்.18

கிளிநொச்சியின் புறநகர் பகுதிகளில் இருந்து 6,500 குடும்பங்கள் கண்டாவளை நோக்கி இடம் பெயர்ந்துள்ளன.

அங்கு தங்க போதிய கட்டடங்கள் இல்லாததால் மக்கள் வீதிகளிலும் மரங்களுக்கு கீழும் தங்கியுள்ளனர்.

கிளிநொச்சி அரச அதிபர் நா.வேதநாயகன் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கும் தற்போது இடம் பெயர்ந்து சென்று கொண்டிருக்கும் மக்களுக்கும் உடனடியாக நிவாரண உதவிகளை வழங்குவதில் சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

நகரப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களும் விமானத் தாக்குதல்களும் இடம் பெறுவதையடுத்தே மக்கள் இடம்பெயர்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

கரைச்சி உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த கோணாவில், பொன்நகர், பாரதிபுரம், மலையாளபுரம், சிவானந்தநகர், கிருஷ்ணபுரம், அம்பாள்குளம், செல்வநகர், தொண்டமான் நகர்,கனகாம்பிகைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற புத்தாக்குநர் கண்காட்சியின் பரிசளிப்பு விழாவில் (நேற்று) யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறைத் தலைவர் கலாநிதி என்.சிவயோகன் ஆகியோர் உரையாற்றுவதை முதல் இரண்டு படங்களிலும் காணலாம். அடுத்த படங்களில் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒருபகுதியினரை காணலாம்



பல்கலைக்கழகத் துணைவேந்தரின் துணைவியார் கௌரி சண்முகலிங்கன் மற்றும் புத்தாக்குநர் ஆணையத்தின் செயலாளர் எஸ்.எஸ்.சந்திரகுப்தா பரிசில்களை வழங்குவதை மேலே உள்ள படங்களில் காணலாம்

# யாழ்.மாணவரின் சிறந்த புத்தாக்கங்கள் கொழும்பில் நடைபெறும் கண்காட்சிக்கு

## புத்தாக்குநர் ஆணையச் செயலாளர் தகவல்

யாழ்ப்பாணம், செப்.18

யாழ்ப்பாணத்து மாணவர்களால் இங்கு காட்சிப்படுத்தப்பட்ட சிறந்த புத்தாக்கங்கள் அடுத்தமாதம் கொழும்பில், பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் கண்காட்சியில் சேர்க்கப்படும்.

நைஜீரியாவில் அடுத்தவருடம் நடைபெற உள்ள சர்வதேச கண்காட்சியில் இடம் பெறக்கூடியதாக மேலும் திறமையுடன் புத்தாக்கங்களை கண்டுபிடியுங்கள்.

இலங்கை தேசிய புத்தாக்குநர் ஆணையத்தின் செயலாளர் எஸ்.எஸ்.சந்திரகுப்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற புத்தாக்கக் கண்காட்சியின் இரண்டாவது நாளான நேற்று வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது.

அங்கு செயலாளர் சந்திரகுப்தா மேலும் கூறியதாவது:

புத்தாக்க ஆணையத்தின் நோக்கம் தொழிநுட்பத்துடன் கூடிய அபிவிருத்திகளை முன்னெடுப்பதேயாகும். அதன் பொருட்பாடாகவே பாடசாலை மட்டத்திலும் மாணவர்களின் கண்டுபிடிப்புத் திறமைகளை ஊக்குவிக்கவுள்ளோம். அத்துடன் பாடசாலைக்குப் புறம்பாகவும் புதிய ஆக்கங்களை உருவாக்கி பலப்படுத்துவது எமது பொருளாதாரத்தின் ஓர் அங்கமாக இருக்க வேண்டும்.

புதிய உற்பத்திகளை வளர்த்தெடுத்துக் கொள்வதன் மூலம் வெளிநாட்டு நாணய மாற்றைப் பெற புத்தாக்குநர் ஆணையத்தின் திட்டங்கள் கைகொடுக்கும்.

மாணவர்களின் திறமையை வெளிக்கொணருவதன் மூலம் வெளிநாட்டில் தங்கியிருக்கும் நிலையைத் தவிர்க்க முடியும். இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக உங்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் சந்தைப்படுத்தலுக்கான ஒத்துழைப்புக்களை சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பேதமின்றி வழங்க வேண்டும் என்பது எமது ஆணையத்தின் கோட்பாடு.

### தொழில் அதிபர்களாக வரவேண்டும்

உங்கள் புதிய ஆக்கங்களை சர்வதேச மட்டத்தில் சந்தைப்படுத்தப்படும் வகையில் விரிவுபடுத்தப்படவும் மொறட்டுவ பல்கலைக்கழகம் ஆதர்சிகிளார்க் விஞ்ஞான அமைப்பின் ஊடாக உதவவுள்ளோம்.

பாடபுத்தகத்திற்கு வெளியே இது போன்ற புத்தாக்கங்களை உருவாக்கி மாணவர்களாகிய நீங்கள் தொழில் அதிபர்களாக வளர வேண்டும்.

இதற்கென ஒரு நிதி எமது ஆணையத்தில் உண்டு. அந்த நிதி மூலம் உங்களுக்கு உதவத் தயாராக உள்ளோம். ஆக்கங்கள் குறித்து உங்களின் உரிமைகளை வழங்கவும் ஆணையம் நடவடிக்கை எடுக்கும். உங்களது புத்தாக்கம் தொடர்பான பிரச்சினைகள் இருப்பின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் புத்தாக்கச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என துணைவேந்தரைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கண்காட்சியை நடத்துவதற்கு துணைபுரிந்த வலயக் கல்விப் பணிப்பாளர், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் உட்பட அனைவருக்கும் எங்களது நன்றிகள் உரியது- என்றார். (அ-111)

# நெடுந்தீவில் கரையொதுங்கிய பெண்களின் சடலங்களில் ஒன்று சுதுமலைவாசியினுடையது

## கைக்குழந்தையின் சடலமும் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், செப்.18

நெடுந்தீவுக் கடற்கரையில் கைக் குழந்தை ஒன்றின் சடலம் நேற்று மாலை கரை ஒதுங்கியுள்ளது என நெடுந்தீவுப் பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிவா னுக்கு அறிவித்துள்ளனர்.

ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன் இன்று அங்கு விசார ணைகளை மேற்கொள்ளவுள்ளார்.

நேற்று முன்தினம் நெடுந்தீவு மற்றும் நயினாதீவில் கரை ஒதுங்கிய நான்கு பெண்களில் ஒருவரின் சடலத்தை அவரது உறவினர்கள் இனங்கண்டுள்ளனர். அப் பெண்மணி சுதுமலை, மானிப்பாயைச் சேர்ந்தவர் என்று அவர்கள் தெரிவித்திருப்பதாக ஊர்காவற்றுறை பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

இராமேஸ்வரம் பகுதியில் இருந்து இலங்கை திரும்பிய அகதிகள் வந்த படகு கவிழ்ந்ததில் உயிரிழந்தவர்களின் சடலங்களே கரை ஒதுங்கி வருவதாக விசாரணையில் அறியவந்துள்ளதாக பொலிஸார் நீதி மன்றத்துக்குத் தெரிவித்துள்ளனர். (அ-1)

# சூட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு

மண்டைதீவு இராணுவ முகாமில் நேற்று மாலை தன்னைத்தானே சுட்டுக் காயமுற்றதாக கூறப்படும் சிப்பாய் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று மாலை 6 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அச் சிப்பாய் அவசர சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

# யாழ்.மாவட்ட இணைப்புக் குழுவின் கூட்டம் பிற்போடப்பட்டது

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருந்த மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது. யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் இத் தகவலைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் விக்ரர் பெரேரா, சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஆகியோரின் கூட்டுத் தலைமையில் இந்தக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவிருந்தது.

கூட்டுத் தலைமை வகிக்க இருந்தவர்களில் ஒருவர் சமுகமளிக்க முடியாத நிலை குறித்து அறிவித்ததைத் தொடர்ந்தே கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது என்று அரச அதிபர் அறிவித்துள்ளார். (அ-1)


# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

07.09.2008 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த

**பிரம்மஸ்ரீ ஞானேஸ்வரக்குருக்கள் நாகேஸ்வரி அம்மா**

**பிரம்மஸ்ரீ ஞானேஸ்வரக்குருக்கள் மனோராஜ்**

**(மாணவன், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)**

*புரட்டாதி மாதம் 3ஆம் நாள் நாளை (19.09.2008) வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் இவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து கந்தர் மடம் செட்டியந்தாழ்வு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் அபிஷேக பூசை இடம்பெற்று தொடர்ந்து மதியபோசனம் இடம்பெறும்.*

*இப் பிரார்த்தனையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள் ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.*

*இந்த அழைப்பை நேரடி அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.*

நாகேந்திரபீடம், 'மயூரிவாசம்',
48, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்.

நா.அமிர்தாம்பிகை அம்மா,
நா.பாலசுப்பிரமணியக் குருக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிந்து விழுந்த பல்கலைக்கழக அரச மரத்தை பாதுகாக்கும் தாவர நேயம் எமக்கு வேண்டும்; வருமா?

அரச மரத்தின் சிறப்பு யாதெனில் அதில் Serpentine என்ற இரசாயனப் பொருள் காணப்படுகின்றது. இது மனித மூளையின் நரம்புக்கல இணைப்பில் செயற்படும் பதார்த்தமாகும்.

இயற்கையான இம்மரங்களிற்குக்கீழ் முனிவர்கள் தவம் இருந்து ஞானம் பெற்றனர். புத்த பெருமானும் அரசமர நிழலிலேயே ஞானம் பெற்றார்.

இவ்வாறு புனித் தன்மைமிக்க விருட்சங்களை அணுகும்போது மன அமைதி இயற்கையாகவே ஏற்பட்டு விடுகின்றது.

அத்தகைய ஓர் அரச மரமே யாழ்.பல்கலைக்கழகத்தில் பல மாணவர்களுக்கு நிழலாக நின்று தாலாட்டுப்பாடி கல்வியைக் கல் கடமையைச் செய் எனக் கூறிச் செல்வது போல் தனது இறுதி நிலையைக் காட்டிச் சென்றுள்ளது.

நான் பாடசாலை மாணவனாக இருந்து பல்கலைக்கழகச் கல்வி கற்று அச்சூழலிலேயே வாழ்ந்து வருகின்றமையினால் பல்கலைக்கழக அரச மரம் எனக்குப் பரீட்சையமானது. மொழி தெரிந்த மனிதர்களுடன் கலந்துரையாடுவதை விட மௌனமான மரத்துடனும் நிற்பது பல தடவைகள் அனுகூலமானது என்பதனை சில விருட்சங்களின் கீழ் நிற்கும்போது உணர்ந்து கொண்டேன். அவ்வாறான ஒரு விருட்சமே எமதுசூழலில்எம்மைவிட்டுச்சென்றுவிட்டது.

300 ஆண்டுகள் பழமை வாய்ந்த அரச மரம் யாழ். பல்கலைக்கழக வாயிலினை அணிசெய்து தன் கடமை முடிந்ததென மெல்லக் குடை சாய்ந்தது. யாருக்கும் நோகாமல் ஆனால் சுமார் 30 வருட கால யாழ். பல்கலைக்கழக வரலாற்றில் பல நிகழ்வுக்கு அது ஆதாரமாக அமைதியாக அவதானித்துக் கொண்டிருந்தது. பல நூற்றாண்டுகள் வாழ்ந்து சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களை அவதானிக்கும் தாவரங்களையே எம்முன்னோர் விருட்சங்களாக வழிபட்டனர். அவ்விருட்சங்களின் கீழ் இறைவனை வைத்து வழிபட்டனர்.

இவ்வாறு பல விருட்சங்கள் எம் மண்ணில் காலத்தின் கண்ணாடிக்கு காட்சிப் பொருளாக உள்ளன. ஒரு மனிதருக்கு மண் பற்று, சமூகப்பற்று என்பன வெறுமனே ஒரு வெற்றிடத்தில் ஏற்படுவதில்லை. அவன் இயற்கையான சூழலில் வாழும்போதே அவனுக்கு அவற்றைக் காக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். சமூக வாழ்விற்குரிய பஞ்ச நேயங்களாக பொருள் நேயம், தாவர நேயம், மிருக நேயம், மனித நேயம், சேவை நேயம் என்பவற்றில் தாவரநேயத் தினை சமூகத்தில் எவ்வாறு மேம்படுத் துவது என்பது பற்றி சிந்தித்தல் குறிப்பாக பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு களையும் நடைமுறைகளையும் மேற் கொள்ளல் வீழ்ந்த அரச மரத்திற்கு நாம் செய்யும் நன்றிக் கடனாக அமையும்.

குறிப்பாக வீழ்ந்த அரசமரத்தின் நிலப் பகுதியினை அவதானித்தால் அதன் ஒரு புறம் தார்வீதியும் மறுபுறம் சீமெந்தால் போடப்பட்ட விளையாட்டுத் திடலும் காணப்படுகின்றன. இவ்வாறு யாழ்ப்பாணத்தில் பல விருட்சங்களைச் சுற்றி, தார் வீதியும் சீமெந்துத் திடல்களும் காணப்படுகின்றன. குறிப்பாக நல்லூர் யாழ். மாநகரசபை அலுவலகத்திற்கு முன்பாக, இவை இயற்கையான தாவரங்களைச் சுற்றி செயற்கையாக மனிதனால் போடப்பட்ட தடைகள். இதனால் அந்நிலத்தில் மழைநீர் செல்வதற்கு வாய்ப்புக் குறையும். இதனால் தாவர வேர்கள் படிப்படியாக இறக்கின்றன. இதனால் அடிமரம் அழிவடையும் அபாயம் உள்ளது.



இது தொடர்பாக விவசாய விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்து கதிர் படங்கள் எடுத்து பல்லாண்டு வாழ்ந்த விருட்சங்கள் பொத்தென வீழ்ந்து விடாது காக்கலாம். இதன்மூலம் தாவர நேயத்தினை சமூகத்தில் திளைக்க விடலாம்.

யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடம், தாவரவியல் துறையைச் சேர்ந்தவர்கள் விவசாயத் திணைக்களம், உள்ளூராட்சி நிறுவத்தினர் இது குறித்துச் சிந்திக்கலாம். வீழ்ந்த மரத்தினை உடனடியாக நிமிர்த்தி உயிர்ப்பூட்டக்கூடிய முறைகளை இன்றைய விஞ்ஞானத்தில் சில நாடுகள் செய்கின்றன. இதனை நாமும் செய்யலாம். மாறாக மரம் எப்பொழுது விழும் எந்தக் கொப்புகளை எப்படித் தறிப்பது, என்ன விலைக்கு விற்பது என்று சடத்துவ ரீதியல் சிந்திக்காது உயிரியல் விஞ்ஞான ரீதியில் நோக்குவது எமது சூழலில் உள்ள ஏனைய விருட்சங்களுக்கு பயனுடையதாக அமையும். பல இளம் சந்ததியினருக்கு ஆய்வுக்குரியதாகவும் அமையும்.

**வைத்திய கலாநிதி**
**சி.யமுனாநந்தா.**

# அழிவுகளை எதிர்கொண்ட பருத்தித்துறை நகரம் நேர்த்தியான திட்டமிடலுடன் அபிவிருத்தியடைய வேண்டும்

மந்திகை, செப்.18

பருத்தித்துறை நகரம் கடந்த காலங்களில் பல்வேறு அனர்த்தங்களால் கடும் பாதிப்புக்கு உள்ளாகிப் பெரும் அழிவுகளை கண்டநகரம். இந் நகரம் நேர்த்தியான திட்டமிடலுடன் பல்வேறு துறைகளிலும் அபிவிருத்திசெய்யப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ்.

பருத்தித்துறை நகரில் புதிதாக அமைக்கப்படவுள்ள சந்தைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் அ.நடராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அடிக்கல் நட்டுவைத்து உரையாற்றும்போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த நிகழ்வில் அரச அதிபர்தொடர்ந்து உரையாற்றுகையில்:

பருத்தித்துறை நகரில் நவீன முறையில் சந்தையை நிர்மாணிப்பதற்கு வடகிழக்கு மாகாண கரையோர சமுதாய அபிவிருத்தி நிறுவனம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இப் பிரதேச மக்கள் போதிய சந்தை வசதிகள் இன்மையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இப் பகுதியில் நவீன முறையில் சந்தை ஒன்று அமைக்கப்பட வேண்டும்என்றுமக்கள்விடுத்த கோரிக்கையை அடுத்தே சந்தையை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நவீன சந்தைக்கான நிர்மாண நடவடிக்கைகள் வெகுவிரைவில் பூர்த்தியடைந்து சந்தை மக்கள் பாவனைக்கு விடப்படவேண்டும் -என்றார்.

இந்த நிகழ்வில் சுவாமி சித்ரூபானந்தா வடகிழக்கு மாகாண கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டப்பணிப்பாளர் வி.வீரபத்திரபிள்ளை, யாழ்.பிராந்திய உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் திருமதி. எம். வசந்தகுமார், பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், யாழ்.கட்டடத் திணைக்களப் பிரதம பொறியியலாளர் கே.குகநேசன்உட்படபலர்உரைநிகழ்த்தினர்.

## சுயதொழில் உதவிகோரி விண்ணப்பித்த 16 பேருக்குக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது

யாழ்ப்பாணம், செப்.18

சமூக சேவைகள் திணைக்களத்திற்கு சுயதொழில் உதவிகோரி விண்ணப்பித்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் 16 பேருக்கு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

பின்வரும் பயனாளிகள் எதிர்வரும் 29ஆம் திகதி தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொண்டு உரிய காசோலையினைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுயதொழில் உதவி கிடைக்கப் பெற்ற பயனாளிகளின் விவரம் வருமாறு:

இரத்தினம் சரஸ்வதி - சரசாலை தெற்கு, மகாலிங்கம் புஷ்பராணி - மீசாலை கிழக்கு, ரவீந்திரராசா தங்கேஸ்வரி - மீசாலை கிழக்கு, சின்னையா செல்லம்மா - சிவன்கோயிலடி, சாவகச்சேரி, எனிஸ்பான் லெட்சுமி - மீசாலை வடக்கு, சின்னத்தம்பி சிறிவதனா - மந்துவில் கிழக்கு, முருகன் சீதேவி - கள்ளிநகர், கைதடி, சுதர்சன் பத்மாவதி - கச்சாய் வீதி சாவகச்சேரி, திருநாவுக்கரசு யோகாம்பாள் - கைதடி தென்.கிழக்கு, கந்தசாமி ஈஸ்வரி - கைதடி மேற்கு, பரம் லெட்சுமி - குடமியன், வரணி, பேரின்பநாயகம் செல்வராணி - பெரிய அரசடி, கந்தையா தர்மலிங்கம் - கைதடி தெற்கு, கணேசமூர்த்தி பரமேஸ்வரி - குடமியன், சிறி மகேஸ்வரி - குட மியன், விஜயகுமார் பரமேஸ்வரி - சரசாலை தெற்கு.

ஏற்கனவே பிரதேசத்தைச் சேர்ந்த 35 பேருக்கு சுயதொழில் உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (203-207)

## சங்கானையில் நடமாடும் சுகாதாரசேவை

யாழ்ப்பாணம், செப்.17

சங்கானை பிரதேச வைத்தியசாலையில் நாளை வெள்ளிக்கிழமை 9 மணி தொடக்கம் 12 மணிவரை நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிப் பகுதிக்குட்பட்ட வைத்திய நிறுவனங்கள் தொடர்பான பிரச்சசினைகள், தேவைகள், வைத்திய நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் அலுவலகம் தொடர்பான பிரச்சினைகள், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிப் பகுதிக்குட்பட்ட சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான பொதுமக்களின் முறைப்பா டுகள் போன்ற விடயங்கள் இச் சேவையில் ஆராயப்பட்டுள்ளன. இத்தகவலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலா நிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (202-51)

## குருநகர் நாட்டுக்கூத்து மன்ற பொன்விழா நிகழ்வுகள்

குருநகர் நாட்டுக்கூத்து மன்றத்தின் பொன்விழா நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

இதில் கலைஞர்கள் கௌரவிப்பு, நடன நிகழ்வுகள், நாட்டியநாடகம் என்பவற்றுடன் குருநகர் இளம்கலைஞர்களின் கூத்து, யாழ்ப்பாணக் கலைஞர்கள் இணைந்து மேடையேற்றவுள்ள பண்டாரவன்னியன் நாட்டுக்கூத்து என்பனவும் இடம்பெறவுள்ளன.



பருத்தித்துறை நகரில் நிர்மாணிக்கப்படவுள்ள நவீன சந்தைக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் உரையாற்றுவதையும் சிவஸ்ரீ.எஸ்.சிவநேசக்குருக்கள், யாழ்.கட்டடத் திணைக்கள பொறியியலாளர் கே.குகநேசன் உட்பட விருந்தினர்கள் நிற்பதை முதலாவது படத்தில் காணலாம்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், நெக்டெப் திட்டப்பணிப்பாளர் வி.வீரபத்திரபிள்ளை ஆகியோர் [illegible] படங்களில் காணலாம். (236-218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1020 நீலம்

வெற்றி இலக்கங்கள்

10 18 26 54

16-09-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 400021293 - 400043402

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 241,782 | 20/- | 4,835,640/- |
| 2 இலக்கங்கள் | 22,125 | 40/- | 885,000/- |
| 1 இல. + [illegible] | 21,926 | 60/- | 1,315,560/- |
| 2 இல. + [illegible] | 2,012 | 200/- | 402,400/- |
| 3 இலக்கங்கள் | 600 | 1000/- | 600,000/- |
| 3 இல. + [illegible] | 52 | 10,000/- | 520,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + [illegible] | - | 2,000,000/- | |
| மொத்தம் | | | 9,158,600/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 288,505 | | 9,658,600/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,079,200/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| அநுராதபுரம் | 400040862-8-28 |
| திருகோணமலை | 400022393-9-22 |
| மட்டக்களப்பு | 400033318-0-00 |
| இரத்தினபுரி | 400028278-5-20 |
| குருநாகல் | 400030494-6-28 |

வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


# வருமான மேற்பார்வையாளர்களுக்கு குடாநாட்டில் வலுவூட்டல் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,செப்.18

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றும் வருமானப் பரிசோதகர்கள், வருமான மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு வலுவூட்டல் பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையில் பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் வருமானப் பரிசோதகர்கள், வருமான மேற்பார்வையாளர்கள் ஆகியோரை பயிற்சி நெறியில் பங்குபற்றுமாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

பயிற்சி நெறியில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனை சிரேஷ்ட ஆய்வு அலுவலர் ப.பாலசுப்பிரமணியம், திருகோணமலை உள்ளூராட்சித் திணைக்கள முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் (தலைமைப்பீடம்) இ.இராமலிங்கம், யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, முன்னாள் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (1-207)

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் பெருந் திருவிழா

யாழ்ப்பாணம்,செப்.18

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இம்மாதம் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தேர்த்திருவிழா அடுத்த மாதம் 13 ஆம் திகதி நடைபெறும். அதனைத் தொடர்ந்து 14 ஆம் திகதி சமுத்திரத் தீர்த்தமும் 15 ஆம் திகதி கேணித் தீர்த்தோற்சவமும் நடை பெறும்.

மகோற்சவ காலங்களில் ஆலயத்தில் தினமும் சமய சொற்பொழிவுகளும் அன்னதானமும் நடைபெறும்.பகல் உற்சவம் காலை 9 மணிக்கும் இரவு உற்சவம் மாலை 3 மணிக்கும் இடம்பெறவுள்ளன.

ஆலயத்திற்கு வருகை தரும் அடியார்களின் நன்மை கருதி விசேட போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது.

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.18

கரணவாய் மகாவித்தியாலய பரிசில் நாள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சி.நற்குணலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வைத்தியசாலை வைத்திய கலாநிதி வே.கமலநாதன் கலந்துகொள்வார். (1)

## உலக தரிசன நிறுவனம் மக்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், செப்.18

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள பொதுமக்களுக்கு உலக தரிசன நிறுவனம் உணவுப் பொருள்களை வழங்கி வருகிறது.

தென்மராட்சியில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளாக வழங்கப்படுகிறது. அரிசி, பருப்பு, மீன்ரின் உட்பட பல உலர் உணவுப் பொருள்கள் வழங்கப் படுவதாக உலக தரிசன நிறுவனப் பிரதிநிதியொருவரால் தெரிவிக்கப்பட்டது. (1-231)


## கண்ணீர் அஞ்சலி



விசேட கல்வித்துறை 9 ஆம் அணி முகிழ் நிலை ஆசிரியர் ராஜ்குமார் அவர்களின் அன்புத் தந்தை

**குட்டியர் தர்மலிங்கம்** அவர்களின்

பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பீடாதிபதி, உப பீடாதிபதிகள்,
கல்வியியலாளர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள்,
(78554) தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தவனம் சந்திரன் (நயினாதீவு)

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், கட்டடங்கள் திணைக்களம், வவுனியா, தலைவர், மணிபல்லவக் கலாமன்றம், நயினாதீவு)



நயினாதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். சுண்டுக்குளியிலும், தெஹிவளையிலும் வசித்துவந்தவருமான கந்தவனம் சந்திரன் நேற்றுமுன்தினம் (16.09.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான கந்தவனம் - சின்னம்மா தம்பதியின்ரின் கனிஷ்ட புதல்வனும், அமரர்களான சேனாதிராசா-மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும், திருமதி நாகம்மா (ஓய்வுபெற்ற உதவித்திட்டமிடல் பணிப்பாளர், வவுனியா) அவர்களின் அன்புக் கணவரும், குமுதினி (கனடா), சுதர்சினி (கொழும்பு), மகேந்திரா (U.K), சாமினி (உதவி விரிவுரையாளர், கலைப்பீடம் கொ/பல்கலைக் கழகம்), குலேந்திரா (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருபாகர் (கனடா), சுந்தரமூர்த்தி (Manon Traders, Colombo - 11) ஆகியோரின் அன்பு மாமனும் சரண்யா, பிரவீனா, பிரவித் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலை கல்கிசையில் 17.09.2008 புதன்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (18.09.2008) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் இறுதிக்கிரியை கல் மகிந்த மலர்ச் சாலையில் நடைபெற்று பூதவுடல் கலகிசை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*17 1/1, கிறஹரி வீதி,*
*தெஹிவளை.*
T.P. No. 0112732918 (சி-554701)
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி சுப்பிரமணியம் பராசக்தி (ஏழாலை தெற்கு)



ஏழாலை தெற்கு, விழுசிட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி சுப்பிரமணியம் பராசக்தி காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம்-சுந்தரம் தம்பதியினரின் அன்பு மகளும், பாலசிங்கம், மங்கையர்க்கரசி, செல்வராணி ஆகியோரின் சகோதரியும், முத்துசுவாமி, நாகராஜா ஆகியோரின் மைத்துனியும், ரஜனி, சிறிரஞ்சிற், காலஞ்சென்ற ஜெயரஞ்சிற், உதயரஞ்சிற், தேவரஞ்சிற், சியாமினி, உஷாமினி, ஹரிதரன், ரியாபரன், கிருபாகரன் ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.09.2008) வியாழக்கிழமை காலை 8 மணி முதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, பிற்பகல் 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக மாலை 4 மணியளவில் பொரளை கனத்தை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்டார்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

G3/8, அன்டர்சன் தொடர்மாடி,
பாக்றோட், நாரஹேன்பிட்டிய,
கொழும்பு - 05.
தகவல்: உதயரஞ்சிற் (பெறாமகன்).
T.P. No. 2590588.

## நிர்வாக உத்தியோகத்தர் தேவை

முன்னணி சமூக நிறுவனம் ஒன்றிற்கு மேற்படி உத்தியோகத்தர் தேவை. ஆங்கிலம், கணனி, கணக்கியல் அறிவுடையவரும் நிர்வாக அனுபவம் வாய்ந்தவரும், தொண்டு உள்ளத்தோடு ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்ய விருப்பம் உள்ளவரும் விரும்பத்தக்கது. 25.09.2008 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இல. 3144, மே/பா.உதயன்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பிறான்சிஸ் மரியம்மா (நெடுந்தீவு)

நெடுந்தீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பிறான்சிஸ் மரியம்மா 15.09.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பிறான்சிஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மரிசலீன்-கிறிஸ்ரினா தம்பதியரின் அன்பு மகளும் பத்திமா (அக்கராயன்), கலாசியஸ் (லண்டன்), புண்ணியம் (லண்டன்), யோகா (கனடா), றெசி (ஆசிரியை, கொழும்பு), பட்டு (ஆசிரியை, அக்கராயன்), சீதா (பிரான்ஸ்), ஜெனிபேட் (மன்னார்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற பொன்ராசா மற்றும் பொன்னுத்துரை, சின்னையா, பொன்னு (புதுக்குடியிருப்பு), தங்கராசா (நெடுந்தீவு), தங்கம்மா (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அம்பிகைவாணன், ஜீவமலர், வன்னிக்கிளி, சகாயராசா, றொபின்சன் ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நெடுந்தீவு மத்தி பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெடுந்தீவு.
தகவல்: சந்தியாக் குருஸ் (மருமகன், J.P.). (78549)

### குட்டியர் தர்மலிங்கம்



கொக்குவில் மேற்கு, கல்திட்டியைச் சேர்ந்த குட்டியர் தர்மலிங்கம்(குணம்) நேற்று (17.09.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டியர்- சிவக்கொழுந்து தம்பதியினரின் பாசமிகு மகனும், சந்திராதேவியின் பாசமிகு கணவரும், சுரேஷ்குமார்(பொது சுகாதாரப் பரிசோதகர்), சுபாஷினி(செயற்திட்ட இணைப்பாளர்- சாந்திகம்), ரமேஸ்குமார் (மெக்கானிக்), டினேஸ்குமார், ராஜ்குமார் (யாழ்,தேசிய கல்வியியற் கல்லூரி), வினோதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுப்பிரமணியம், சரஸ்வதி, நவரட்ணம், தவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2008) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்திட்டி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,கொக்குவில்.
தகவல்: (78560) மனைவி, பிள்ளைகள்.

## தவறிவிட்டது

அராலி வடக்கு, வட்டுக்கோட்டை என்னும் முகவரியுடைய முத்துலிங்கம் யோகேஸ்வரி என்பவரின் தேசிய அ. அட்டையும்,சிவலிங்கம் யோகேஸ்வரி என்னும் பெயருடைய விசேட அ.அட்டையும் யாழ் நகரப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறித்த முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (78539)

## வான் விற்பனைக்கு

253-XXXX இலக்கமுடைய டொல்பின் வான் உடன் விற்பனைக்கு உண்டு.
T.P.:-0776192927
S.பாலச்சந்திரன்
மிசன் பாடசாலை வீதி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி. (C/554697)

## காணி விற்பனைக்கு

தாவடி, வன்னியசிங்கம் வீதிக்கு அருகில் 2¼ பரப்பு வெறுங்காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: திருமதி தி.விமலா,
கலட்டி லேன்,கோண்டாவில் மேற்கு,கோண்டாவில்.
TP.: 0777 251036, 0777 168869 (78544)


## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொகையாக கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
உதயன் பாம், நாயன்மார்கட்டு.
(முறிவு நெரிவு வைத்தியசாலைக்கு அருகில்)

## தவறிவிட்டது

ஏழாலை மத்தி, ஏழாலை என்னும் முகவரியுடைய பேரம்பலம் உதயமலர் என்பவரது தே.அ. அட்டை (658372348V),விசேட அ.அட்டை என்பன 16.09.2008 அன்று கோண்டாவில் மேற்கு புவனேஸ்[illegible] கண்டெடுத்தவர்கள் த.தர்மராஜா, பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




தென்மராட்சிப் பிரதேச கலாசாரப் பேரவையின் கலை இலக்கியப் பெருவிழா கடந்த சனிக்கிழமை தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் நடைபெற்றது.
நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் க.கந்தசாமி,சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர் ஆகியோர் உரைநிகழ்த்துவதை மேல்வரிசையில் உள்ள படங்களில் காணலாம்.
நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும்-
இசைப்போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகள் இசை விருந்து, காத்தவராஜன் கூத்தில் ஒரு காட்சி ஆகியவற்றை கீழ்வரிசைப் படங்களில் காணலாம்.
(படங்கள்: தென்னவன்)

# தமிழகத்தின் மண்டபப் பகுதியில் விமானத்தளம் அமைப்பதற்கு இந்திய விமானப்படை ஆய்வு

## புலிகளின் ஊடுருவலைத் கண்காணிப்பதற்காம்

சென்னை,செப்.18

புலிகள் தமிழகத்திற்குள் ஊடுருவும் வாய்ப்புள்ளது என இந்திய இராணுவம் கருதுகிறது. இதையடுத்து தமிழகத்தின் மண்டபம் பகுதியில் விமானத்தளம் மற்றும் மேலதிக 'ராடர்'தளம் என்பவற்றை அமைப்பதற்கு இந்திய விமானப்படை அதிகாரிகள் ஆய்வு செய்துவருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையிலான மோதலில் புலிகள் விமானத் தாக்குதலில் ஈடுபட்டு வருவதால் இராமேஸ்வரம் மண்டபம் அருகே விமானத்தளம் அமைப்பதற்கான இடத்தை அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

மேற்படி நடவடிக்கைகளுக்காக இந்திய விமானப்படைத் தளபதி உபேதா கடந்த ஞாயிற்றுக்கிழமை திருவனந்தபுரத்திலிருந்து மண்டபம் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு இதற்கான ஆய்வுகளை நடத்தியுள்ளார்.

தற்போது மண்டபம் அருகே சுந்தரமுடையான் பகுதியில் உள்ள ராடர் தளம் மூலம் இந்திய வான்வழி கண்காணிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து சுந்தரமுடையானில் உள்ள ராடர் தளம் சென்ற தளபதி உபேதா அங்கிருந்த அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தியுள்ளார்.

கடந்த மார்ச் 17ஆம் திகதி விமானப்படை எயார் மார்ஷல் ரானே, மண்டபம் வந்து ராடர் தளத்தைப் பார்வையிட்டார். அப்போது மண்டபம் பகுதியில் 22 ஏக்கரில் விமானத்தளம் மற்றும் மேலும் ஒரு ராடர் தளம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

தற்போது இலங்கையில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையிலான மோதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், புலிகள் தமிழகத்துக்குள் ஊடுருவ வாய்ப்புள்ளது என எதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்தே வான்வழிக் கண்காணிப்பை மேம்படுத்த, மண்டபம் பகுதியில் விமானத்தளம் மற்றும் மேலதிக ராடர்கள் தளம் அவசியம் என இந்திய விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(202)

## றெக்கிளமேசன் சனசமூக நிலையக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

குருநகர், செப்.18

றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும் என தற்போதைய நிர்வாகம் அறிவித்துள்ளது.

இச்சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடத்த இரு தடவைகள் நிர்வாகம் பொதுமக்களுக்கு அறிவித்தல் வழங்கியது. கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கூட்டம் நடைபெறும் என அறிவித்தல் வழங்கிய போது கூட்டத்திற்கு போதியளவு மக்கள் வருகை தந்த போதிலும் நிர்வாகம் தனது உறுப்பினர்கள் வருகை தரவில்லை என அறிவித்து பொதுக்கூட்டத்தை மேற்குறிப்பிட்ட திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக இக் கூட்டத்திற்கு சமுகமளித்தவர்கள் தெரிவித்தனர்.

(51)

# மடுப் பிரதேசத்தை மீட்டதற்கு கத்தோலிக்க சமூகம் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்

## வத்திக்கான் கர்தினால் கூறியுள்ளார்

கொழும்பு, செப்.18

மடுப் புனித பிரதேசத்தை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டு அதனை திருச்சபையினரிடம் ஒப்படைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இலங்கையில் வாழும் முழுக் கத்தோலிக்க சமூகமும் நன்றி தெரிவிக்க வேண்டும். இவ்வாறு வத்திக்கான் கர்தினால் பிரன்சிஸ் அரின்சே தெரிவித்துள்ளார்.

ஆசிய பங்குத்தந்தைகளின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்துள்ள அவர் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து உரையாடியபோதே இவ்வாறு கூறினார் என அரச இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, மதச் சுதந்திரம் மற்றும் இயல்பு வாழ்க்கை என்பவற்றை உறுதி செய்யும் நோக்கில் படையினர் பயங்கரவாதிகளிடம் இருந்து புனித மடு தேவாலயத்தை மீட்டனர் என்றும் புலிகளால் சேதப்படுத்தப்பட்ட தேவாலயம் படையினரால் புனரமைக்கப்பட்டு கத்தோலிக்க மதகுருக்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறினார்.

இலங்கை வந்த பின்னரே இலங்கையில் உண்மையான நிலவரங்களைப் புரிந்து கொள்ள முடிந்தமை குறித்துத் தான் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் இயற்கை அழகில் இலங்கை ஏனைய நாடுகளை விட முன்னிலையில் இருப்பதாகவும் வத்திக்கான் கர்தினால், மேலும் தெரிவித்துள்ளார்.

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், செப்.18

கொடிகாமம் பிரதேச முன்பள்ளி சிறார்களுக்கான மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயமைதானத்தில் நடைபெறவுள்ளது.

குடும்ப முன்பள்ளிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில் முதலிரு இடங்களைப் பெற்ற சிறார்களை இப்போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராசா கேட்டுள்ளார்.

## வலி.கிழக்கு செயலர் பிரிவில் தே.அ.அட்டைக்கு விண்ணப்பிக்கலாம்

கோப்பாய், செப்.18

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் பிறப்புப் பத்திரம் இன்மையால் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்கள் காலம் கடந்த பதிவை மேற்கொள்வதன் மூலம் பிறப்புச் சான்றிதழைப் பெற்றோ, அல்லது உத்தேச வயது சான்றிதழைப் பெற்றோ அடையாள அட்டைக்கு உடனடியாக விண்ணப்பிக்குமாறு வலி.கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் கேட்டுள்ளார். (72)

# மத்தியில் தமிழை ஆட்சி மொழியாக்க நாம் அனைவரும் குரல் கொடுப்போம்

சென்னை, செப். 18

மத்தியில் தமிழை ஆட்சி மொழியாக்க நாம் அனைவரும் உரத்த குரல் கொடுப்போம். போராட்டத்துக்காகக் கோரிக்கை எழுப்பாமல் கோரிக்கைக்களுக்காகப் போராட நல்வழியைத் தேர்ந்தெடுப்போம். அண்ணாவின் கொள்கையான மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்பதில் உறுதியுடன் இருப்போம்.

- இவ்வாறு அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி சென்னையில் நடந்த கவியரங்கில் முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழா கடந்த திங்கட்கிழமை தொடங்கியது. விழாவையொட்டி, அரசு சார்பிலும், தி.மு.க. சார்பிலும் நாடு முழுவதும் பல்வேறு விழாக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த வகையில், அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி, தி.மு.க. சார்பில் சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் "அணையா விளக்கு - அண்ணா" என்ற தலைப்பில் சிறப்புக் கவியரங்கம் நடைபெற்றது.

கவியரங்கிற்கு, தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான கருணாநிதி தலைமை வகித்தார். உள்ளாட்சித்துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் வரவேற்றுப் பேசினார்.

முதல்வர் கருணாநிதி தனது கவிதையில் மேலும் கூறியவை வருமாறு-

மத்திய ஆட்சி மொழிகளில் தமிழையும் ஒன்றாகக் கொண்டுவர உரத்த குரல் கொடுப்போம். போராட்டத்துக்காக கோரிக்கை எழுப்பாமல் கோரிக்கைக்காகப் போராடிட நல்வழியைத் தேர்ந்தெடுப்போம். அண்ணாவின் கொள்கையான மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்பதில் உறுதியுடன் இருப்போம் - என்றார்.

விழாவில், கவிஞர்கள் வாலி, வைரமுத்து, அப்துல் ரகுமான், மு.மேத்தா, தமிழச்சி தங்கபாண்டியன், அருட்தந்தை வின்சென்ட் சின்னத்துரை ஆகியோர் கவிதை பாடினார்கள்.

## சிற்பக்கலைஞருக்கு 'கலை ஞாயிறு' பட்டம்

நவாலி, செப்.18

வலி.தென்மேற்குப் பிரதேச செயலகம் நடத்திய கலை விழாவில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கனகசபை இராசேந்திரம் சிற்பக்கலைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி 'கலை ஞாயிறு' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வில் கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அவரை பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டது.

(100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**V.S.S. நல்லெண்ணெய் நிறுவனத்தின்**

**முக்கிய அறிவித்தல்**




நல்லெண்ணெய் லேபல் வடிவமைப்பைப் போன்ற லேபல்களுடன் வேறு நல்லெண்ணெய் விற்பனைக்கு வந்துள்ளதாக தெரியவந்துள்ளது. ஆகவே, வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள் V.S.S. எனக் குறிக்கப்பட்ட லேபல்களையும் நல்லெண்ணெய் போத்தல் மேல் V.S.S.சீல் உள்ளதா என அவதானித்து வாங்கிக் கொள்ளவும்.

உரிமையாளர்:

**வ.ச.சுந்தரலிங்கம்**

(78519)

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.


# ஈழத்தமிழர் விவகாரத்தில்

# தமிழக மக்களின் கருத்தையறிந்தே இந்திய அரசு செயற்பட வேண்டும்

## பொதுவாக்கெடுப்பு நடத்தக் கோருகிறார் திருமாவளவன்

சென்னை, செப்.18

ஈழத்தமிழர் பிரச்சினையில் எத்தகைய நிலைப்பாட்டை மேற்கொள்வது என்பது குறித்து இந்திய அரசு, தமிழக மக்களிடையே பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி அதன்படி செயற்பட வேண்டும்.''

-இவ்வாறு விடு தலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

ஈழத்தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்டுவரும் போரில் அந்நாட்டு அரசிற்கு ஆதரவாக செயற்பட இராணுவச் சிப்பாய்களை இந்தியா அனுப்பியமை குறித்து இந்திய அரசைக் கண்டித்து சென்னை யில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நேற்று முன்தினம் கண் டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை சோப்பாக்கத்தில் அரசு விருந்தினர் மாளிகைக்கு எதிரே நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தலைமை தாங்கினார். இரா.சனார்த்தனன், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், திரைப்பட இயக்குநர் சீமான், தங்கர் பச்சான், திரைப்பட நடிகர் மன்சூர் அலிகான், தமிழின உணர்வாளர்களான தியாரூ, ஓவியர் வீர சந்தானம் உள்ளிட்ட பெருந் திரளானோர் கலந்து கொண்டனர்.

விழாவில் பேசிய தொல். திருமாவளவன் மேலும் கூறியவை வருமாறு:-

சிங்கள அரசிற்கு இந்திய அரசு இராணுவ உதவி அளித்து வருவது ஏன்? இதற்கான அனுமதி நாடாளுமன்றத்தில் பெறப்பட்டுள்ளதா? இது குறித்து தமிழகத்தை சேர்ந்த மக்களவை உறுப்பினர்களின் கருத்தறியப்பட்டுள்ளதா? அல்லது தமிழக முதல் வரிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா என்பதை மத்திய அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

கிட்டத்தட்ட நானூறு கோடி ரூபா மதிப்பில் சிங்களப் பேரினவாத அரசிற்கு இந்தியா ஆயுத உதவி வழங்க வேண்டியதன் அவசியம் என்ன என்பதை பிரதமர் நாட்டு மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும்.

தமிழினத்தைச் சேர்ந்த மக்கள் தனியாக நாடு அடைந்திடக்கூடாது என்பதுதான் இந்தியாவின் அரசியல் கொள்கையா? இவ்விடயத்தில் அமெரிக்காவின் எண்ணப்படிதான் இந்தியா செயற்பட்டு வருகின்றது. இந்த விடயத்தில் இந்திய அரசின் அயலுறவுக் கொள்கையில் மாற்றம் தேவை என்பதை எங்கள் கட்சி வலியுறுத்துகின்றது. இது குறித்து தமிழக மக்களிடையே வாக்கெடுப்பு ஒன்றை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும். அந்த வாக்கெடுப்பின்படி தன்னுடைய செயற்பாட்டை இந்திய அரசு மேற் கொள்ள வேண்டும் - என்றார்.



இவ்விழாவில் திரைப்பட இயக்குநர் சீமான், இன உணர்வாளர் தியாகு, வ.உ.சி. பேரவையின் செய லாளர், தமிழ்தேசிய இயக்கப் பேரவையின் துணைத்தலைவர் சமரன் உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மத்திய சென்னை மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி யின் செயலாளர் வீரமுத்து ஏற்பாடு செய்திருந்தார். இந்த ஆர்ப்பாட்டத்தின் போது இந்திய அரசிற்கு எதிராகவும், சிங்கள அரசிற்கு எதிராகவும் கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன. (சி)


# STUDY IN UKRAINE (EAST EUROPE)

**MBBS/MD** With O/L'S - 7years
With A/L' - 6years

**LUGANSK STATE MEDICAL UNIVERSITY**

*Recognized By Sri Lankan Mdical Council*

**100% VISA SUCCESS**

எமது நிறுவனத்தின் மூலம் கடந்தமாதம் அனுப்பப்பட்ட மாணவர்கள் அனைவரும் எதுவித சிரமமுமின்றி VISA வை பெற்றதுடன் தற்போது UKRAINEஇல் தமது கல்வியை தொடர்கின்றனர். (Royal College Colombo, Hindu College Colombo, St.Patricks College Jaffna, St.John's College Jaffna St.Michael's College Batticaloa, Holy Family Convent Jaffna, Hindu Ladies College, Ramanathan Hindu Ladies School Adventist International College Vavuniya, Vavuniya Maha Vidyalayam. ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவர்கள்.

**SPONSOR/ BANK BALANCE தேவையில்லை**

UKRAINE ஆனது கிழக்கு ஐரோப்பிய நாடென்பதால் UKRAINE STUDENT VISA உடையமாணவர்கள் ஐரோப்பாவில் உள்ள அண்டைநாடுகளாகிய Poland, Romania, Austria , Italy, France, Spain, Germany.U.K. ஆகிய நாடுகளுக்கு மருத்துவ கல்வி மற்றும் பயிற்சி நிமித்தம் சென்றுவருவதற்கான அரியவாய்ப்புண்டு.

Call: 0777 - 818/ (011) 4512591
scholinfo@yahoo.com

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, Colombo Plaza, 50 Galle Road, Colombo.06



# கண்ணீர் அஞ்சலி



கோண்டாவில் மேற்கு.

கானமழை பொழிந்த

**வி.கே.கானமூர்த்தி**

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்,
கோண்டாவில் மேற்கு -கந்தர்வளவு
ஸ்ரீ மகா கணபதி பிள்ளையார் கோயில்.



உ

தென்மராட்சிக் கலைமன்ற ஆதரவில்

**சுபாலயம் நடத்தும்**

# நூல் வெளியீடும் கலை விழாவும்

**பரதநாட்டியம் வினா விடையும் குறிப்புகளும் தரம் 6–9**

**நூல் ஆசிரியர்: திருமதி சுபாதினி தயாபரன்**

இடம்: தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபம்
சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி

காலம்: 21.09.2008 ஞாயிற்றுக்கிழமை மு.ப.8.30 மணி

**நிகழ்ச்சி நிரல்**

1. மங்களவிளக்கேற்றல்
2. தேவாரம்
3. வரவேற்புரை: : திரு.சி தயாபரன்
4. தலைமையுரை : திரு.க. மோகனராஜலிங்கம்
5. சிறப்பு விருந்தினர் உரை : திரு.அ.கபிலாயபிள்ளை
6. பிரதம விருந்தினர் உரை : திரு.கு.பிறேமகாந்தன்
7. வாழ்த்துரை : : திரு.கு.சிவானந்தம்
8 ஆசியுரை: : திருமதி பு.சுழநேசன்
9. நூல் வெளியீட்டுரை : திருமதி சு.முரளிதரன்
10. அறிமுகவுரை: : பேராசிரியர் வி.சிவசாமி
11. பதிலுரை : : திருமதி சுபாதினி தயாபரன்
12. முதற்பிரதி பெறுதல் : திரு.சௌ.சஞ்சீவ்
13. சிறப்பு பிரதிகள் வழங்கல்
14. மாணவிகளின் கலை நிகழ்வுகள்

(78460)

விழாச்சிறப்புற வாழ்த்துவோர்:

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்**

இல.105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



# பாராட்டி பிறந்ததின வாழ்த்தும்



தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா தென்மராட்சி சாவகச்சேரியில் நடைபெற்ற கதம்ப விழாவில் யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன்

**இரவீந்திரன் சஞ்சீவ்**

அவர்களுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட மாவட்ட நீதிபதி உயர்திரு. அ.பிரேம்சங்கர் துணைவியார் சகிதம் வெற்றிக் கிண்ணம் வழங்குவதைப் படத்தில் காணலாம். மேலும் இ.சஞ்சீவ் இன்று (18.09.2008) வியாழக்கிழமை தனது பதின்மூன்றாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அம்மா, அப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா மற்றும் உற்றார்,உறவினர் நல்லூர் முருகனின் அருள் பெற்று சகல சௌபாக்கியங்களுடன் இனிதே வாழ வாழ்த்துகின்றார்கள்.

(78489)

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

**சிவானந்தன் ரணீஸ்**
**(அண்ணன்), யாழ்ப்பாணம்.**



# கண்ணீர் அஞ்சலி



நாச்சிமார்கோயிலடி.

(78524)

கலாபூஷணம் நாகசுரவித்துவான்

**வி.கே.கானமூர்த்தி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**எஸ்.திருச்செல்வம் புஸ்பராணி**
**குடும்பத்தினர் (தவில்).**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இந்த வாரம்

SEPTEMBER 18

### செப்ரெம்பர் 18

புகழ்பெற்ற 'நியூயோர்க் டைம்ஸ்' என்னும் தினசரிப் பத்திரிகை 1851 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 18ஆம் திகதி யன்று தான் ஆரம்பிக்கப்பட்டது.


நியூயோர்க் டைம்ஸ் கட்டடம்

### செப்ரெம்பர் 19


கொள்ளை நோயை சித்திரிக்கும் ஓவியம்

லண்டனில் ஏற்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கொள்ளை நோய் (தி கிரேட் பிளேக் ஆஃப் லண்டன்) 1665ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19இல் தான் முடிவுக்கு வந்தது.

### செப்ரெம்பர் 20

'இரண்டாம் எலிசபெத் ராணி' என்ற மிகப்பெரிய பிரயாணிகள் கப்பல் 1967ஆம் ஆண்டு செப்ரெம்பர் 20ஆம் திகதி தான் கடலில் மிதக்கவிடப்பட்டது. இதனுடைய மதிப்பு 30,000,000 பவுண்கள் ஆகும்.


இரண்டாம் எலிசபெத் ராணி கப்பல்


### செப்ரெம்பர் 21


ஹெச்.ஜி.வெல்ஸ்

கால யந்திரம் போன்ற பல விஞ்ஞான நூல்களை உருவாக்கிய புகழ்பெற்ற எழுத்தாளரான ஹெச்.ஜி.வெல்ஸ் 1866ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21ஆம் திகதியன்றுதான் பிறந்தார்.

### செப்ரெம்பர் 22

பிரான்ஸ் நாடு 1972ஆம் ஆண்டு செப்ரெம்பர் 22இல் தான் குடியரசு நாடாகத் தன்னை உலகுக்குப் பிரகடனப்படுத்தியது.

பிரான்ஸின் தேசியக்கொடி


### செப்ரெம்பர் 23


சிக்மண்ட் பிராயிட்

உடற்பகுப்பாய்வியல் சரித்திரத்தில் பல உண்மைகளை உலக்குக்கு அளித்தவரும், சைகோ அனாலிஸ கோட்பாட்டை உருவாக்கியவருமான நியூரோலாஜிஸ்டான சிக்மண்ட் பிராயிட் என்னும் ஆஸ்திரிய நாட்டுக்காரர் 1939ஆம் ஆண்டு செப்ரெம்பர் 23ஆம் திகதியன்று தான் இறந்தார்.

### செப்ரெம்பர் 24


பென்சிலின் சிகிச்சையில் பிரபலமானவரான ஹோவர்டு ஃபுளோரே என்பவர் 1968ஆம் ஆண்டு செப்ரெம்பர் 24இல் தான் இறந்தார்.

ஹோவர்டு ஃபுளோரே


# இலங்கைக் கல்விமுறை இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு

## தடைக்கல்லாக உள்ளது

'கல்வி என்பது சமூகப் புனரமைப்புச் சாதனம். அது பயனுள்ளதாக அமையவேண்டும்'' என் பது அமெரிக்கக் கல்வியியலாளர் யோன் டூயியின் கருத்துக்களில் ஒன்றாகும். அந்த வகையிலே கல்வியானது இளைஞர்களின் முன்




னேற்றத்திற்கு வழி சமைப் பதாக இருக்கவேண்
டுமே தவிர தடைக்கல்லாக அமையக் கூடாது.
இலங்கையின் கல்வி முறையினை எடுத்துக்
கொண்டால் இந்நாட்டின் கல்வி முறைக்கு அடிப்
படையான பொருத்தமான தத்துவார்த்த நோக்கு
ஒன்று வழங்கப்படவில்லை என்றுதான் கூறவேண்
டும். பல இனங்களையும், மொழிகளையும் கொண்ட
ஒரு நாட்டில் கல்வி முறை கொண்டிருக்கவேண்டிய
அடிப்படை இலக்குகள், நோக்குகள் இவை அனைத்
தையும் உள்ளடக்கிய ஒரு கல்வித் தத்துவம் உரு
வாக்கப்படாத நிலையில் இந்த நாட்டின் கல்வி
முறை பல லட்சக்கணக்கான மாணவர்களை எங்கே
கொண்டு செல்கின்றது என் பதை யாரும் வரையறு
றுக்க முற்படவில்லை. கல் வியின் நோக்கு, கல்விப்
பொருள், பாட ஏற்பாடு கற் பித்தல் முறை என்னும்
அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்தாது ஏற்க
னவே வழங்கப்பட்டு வந்த கல்வியைப் பெறுவோர்
தொகை அதிகரிக்கப்பட் டது. ஆனால் கல்விமுறை
தொடர்ந்து கருத்தியல் அறிவைப் பெறுவதையே
வலியுறுத்தியது. மாணவர்களின் ஆற்றல்களில் காணப்படும் பல்வகைத் தன்மை கருத்திற்கொள்ளப்படாது முறைப்படுத்தப்படாத, தரப்படுத்தப்பட்ட ஒரே வகையான கல்வியை வழங்கி சகல மாணவர்களும் ஒரு மையப்படுத்தப்பட்ட கலாசார, அறிவுச்சிந்தனை வாய்ப்புக்குள் மட்டுப்படுத்தப்பட்டனர்.

இத்தகைய ஒருவழிப்போக்கான கல்விமுறை கருத்தியல் அறிவினை வழங்குவதற்கு அப்பால் சென்று தலைமைத்துவ ஆற்றல்கள், தொடர்பாடல் திறன்கள், தொழிற்திறன்கள் என்பவற்றை மேம்படுத்துவதில் அக்கறை செலுத்தவில்லை. எனவே இலங்கைக் கல்விமுறை இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாக அமைந்துள்ளது என்பது எனது கருத்தாகும்.

*இலங்கைக் கல்விமுறை இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு வழி சமைக்கிறது என்ற தொனியில் அமைந்துள்ள கருத்துக்கள் அடுத்தவாரம் பிரசுமாகும்.*

என்.நெல்லி,
யாழ்ப்பாணம்.




## பொறுத்தது போதும்

பெண்ணே! எழுந்துவிடு
இனியும் வேண்டாம்
உனக்கெந்தச் சோகமும்
அடுக்களையில்
அமர்ந்ததுபோதும்
அகிலத்தை ஆளப் புறப்படு
கன்னி உந்தன்
கடைக்கண் பார்வைக்காய்
காத்திருக்கும் காமுகர்கள்
அழிய
கண்ணகியாய் நீ மாறு
உற்றவர்க்கு பயந்து நீ
உறங்கிவிடாதே
மற்றவர்க்காக நீ
மடிந்து விடாதே
பேதை உந்தன் பேச்சினிலே
பெருமைகொள்ளும்
இவ்வுலகம்
நண்பனின் நட்பைக் கூட
வஞ்சகத்துடன் பார்க்கும்
இவ்வுலகினில் நீ
பெட்டிப்பாம்பாய்
ஒளிந்திடாதே
பொறுத்ததுபோதும்
பொங்கி எழு பெண்ணே...!

வை.தர்ஷிக்கா,
யாழ்ப்பாணம்.

## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் '**இளவல்கள் வட்டம்**' என்ற புதிய பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-.......................................
முகவரி :-.......................................
:-.......................................
........................ ........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## கேள்விக்கு என்ன பதில்?



அந்தக் காட்டில் யானைகள் கூட்டமாக வசித்து வந்தன. மொத்த யானைகளில் பாதியும், பாதியில் மூன்றில் ஒரு பாகமும் காட்டில் திரிந்தன; ஆறில் ஒரு பாகமும், அதில் ஏழில் ஒரு பாகமும் சேர்ந்து ஆற்றில் தண்ணீர் குடிக்கப் போயின; மேலும் எட்டில் ஒரு பாகமும், அதில் ஒன்பதில் ஒரு பாகமும் சேர்ந்த விளையாடிக் கொண்டிருந்தன. யானைகளின் தலைவன் மூன்று பெண் யானைகளுடன் இருந்தான். அப்படியானால் யானைகளின் மொத்த எண்ணிக்கை என்ன?

*(இதற்கான விடைகளை எழுதியனுப்புங்கள். சரியான விடை அடுத்த வாரம்)*

### கேள்விக்கு என்ன பதில் - 1 இன் விடை

### வியாபாரி பறித்த தேங்காய்கள் 1200

1) முதலாவது காவலாளியிடம் 600 தேங்காய்கள் கொடுத்தார். 600 மீதி.
2) இரண்டாவ்து காவலாளியிடம் 200 கொடுத்தார். மீதி 400.
3) மூன்றாவது காவலாளியிடம் 100 கொடுத்தார். மீதி 300.
4) நான்காவது காவலாளியிடம் 60 கொடுத்தார். மீதி 240.
5) ஐந்தாவது காவலாளியிடம் 40 தேங்காய்கள் கொடுத்தார். வியாபாரி வெளியே கொண்டு வந்தது 200 தேங்காய்கள் ஆகும்.

**சரியான விடை எழுதிய வாசகர்கள்:**

1. கயல்விழி சற்குணம் - *12/2, வில்வற் தெரு, கொழும்புத்துறை.*
2. உதயணன் கௌதமன் - *புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்றுறை.*
3. ச.யனந்தினி - *'அம்பிகை வாசா', உடுவில் கிழக்கு, சுன்னாகம்.*
4. யசோதரா சண்முகராசா - *சிவன் மாளிகை, மாரியம்மன் லேன், திருநெல்வேலி.*
5. யமுனா லீலாவிநோதன் - *'மாணிக்க பூங்கா', மறவன்புலோ, சாவகச்சேரி.*
6. சி.துஷானா - *கேலன்காமம் முகாம், கட்டுடை, மானிப்பாய்.*
7. லாவன்ஜா லோகநாதன் - *வியாபாரிமூலை, பருத்தித்துறை.*
8. ஜோன் செல்வம் ஏஞ்சலின் - *றோ.க.மகளிர் பாடசாலை, நெடுந்தீவு.*

**பகுதி 5**

# தலையெழுத்தைத் தீர்மானிக்கும் கையெழுத்து

தாய் தந்தையரின் பாரம்பரியப் படி
மங்களிலிருந்தே பிள்ளைகளின் கையெ
ழுத்து உருவாகிறது. அது இயற்கையிலி
ருக்கும்போது உண்மையாகவும், மன
அழுத்தத்தில் இருக்கும்போது பிசிறும்
எழுத்துக்களாகவும் அமையும். எவ்வாறாயி
னும் சௌக்கமாக எழுதுகின்ற கையெழுத்துக்கள் பரீட்
வெல்லும் அழகெழுத்துக்களாக மிளிரக்கூடியன.
சையின்போதும், குறிப்பெடுக்கும் போதும், சமநிலை குன்றிய போதும்
எழுத்துக்கள் சொல்வழி கேட்பதில்லை. ஆனால் பரீட்சை என்று வரும்
போது கையெழுத்தென்பது நேர்த்தியாக இருக்கவேண்டும். அழகான எழுத்
துக்கள் திருத்தும் பரீட்சகர்களை உளம் மகிழச் செய்யும் என்பதால் 5 விடை
களுக்கு தலா 1 புள்ளி வீதமாக இரண்டாம் பகுதி
யில் மட்டும் ஐந்து புள் ளிகளையாவது, பெற்ற
புள்ளிகளுடன் கூட்டி வழங்க வாய்ப்பு உண்டா
கும். 70 புள்ளியைப் பெற வேண்டிய ஒரு மாணவ
னுக்கு இப்போ 75 புள்ளிகிடைக்கிறது. B இல் இருந்த மாணவனுக்கு A
கிடைக்கிறது. இதனை வெளிப்படையாக யாரும் ஒத்துக்கொள்ளவேண்டிய
அவசியம் இல்லை. அதேபோல் 30 புள்ளி எடுத்த மாணவ
னுக்கு 35 புள்ளி - ஒரு சாதாரண சித்தியை வழங்குகின்றதை
யும் எண்ணிப்பார்க்கும்போது கையெழுத்து தலையெழுத்
தாகிறது. தரம் ஒன்றிலிருந்து - தரம் 13 வரையும் பாடசாலைச்
சமூகமும், பெற்றோர்களும் இவ்விடயத்தில் ஏனோதானோ
என்றிருக்காது அதீத கவனம் எடுப்பார்களாக இருந்தால்
மனித சமுதாயத்தின் தலையெழுத்தைத் தீர்மானிப்பது கையெ
ழுத்தாகவும் அமையும். இக்கூற்றுக்கு உயிர் உண்டு என்
பதை யாரும் மறந்துவிடலாகாது. 'எண்ணும் எழுத்தும் கண்
ணெனத் தகும்'. கையெழுத்து என்ற விடயத்தில் நாம் பெரி
தும் முன்னேறவேண்டும்.

கே.எஸ்.சிவஞானராஜா,
கொக்குவில்.



(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சிலுவை சர்வதேசக் குழுவை வன்னியிலிருந்து வெளியேறுமாறு அரசு தற்போது கோரவில்லை

### ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா கூறுகிறார்

"செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணியாளர்கள் வன்னியிலிருந்து வெளியேற வேண்டிய அவசியமில்லை என்பதுவே அரசின் நிலைப்பாடாகும்.

- இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

தேசிய அபிவிருத்தி தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசு தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் செஞ்சிலுவைச் சர்வதேச குழு வன்னியிலிருந்து வெளியேற மறுப்பது உண்மையா என அமைச்சரிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

ஒவ்வொரு சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனமும் வெவ்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற செயற்பாடுகளை மோதல் இடம்பெறும் பகுதிகளில் மேற்கொள்வது சாத்தியமற்றது. குறித்த பகுதி விடுவிக்கப்பட்டதன் பின்னரே இப்பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதுபோன்ற பணிகளில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனங்களையே அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருமாறு அரசுஅழைப்பு விடுத்தது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளின் பணிகள் வேறு. இவர்கள் புலிகளுக்கும் படையினருக்குமிடையே மத்தியஸ்தம் செலுத்தும் பணியில் ஈடுபடுகின்றனர். இரு தரப்பினருடைய சடலங்களும் இந்தச் செஞ்சிலுவை சர்வதேச குழுவின் ஊடாகவே பரிமாறப்படுகின்றன. எனவே, இவர்களது பணி முக்கியமானது. இவர்களுக்குத் தேவையான வசதிகளை அரசு செய்து கொடுக்கும்.

வன்னியிலிருந்து திரும்பியுள்ள தன்னார்வத் தொண்டுநிறுவனங்களின் சொத்துக்களைக் கணிப்பிடச் செய்து அரசிடம் ஒப்படைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. வன்னிப் பகுதி மீட்கப்பட்டவுடன் அவர்கள் அப்பிரதேசங்களில் தமது அனைத்து வளங்களுடனும் செயற்படலாம்.

இராணுவ முன்னெடுப்பு இடம்பெறும் பிரதேசங்களிலுள்ள மக்களைப் பாதுகாப்பது அரசின் பொறுப்பாகும். இதனால்தான் அங்குள்ள மக்களை அப்பிரதேசங்களிலிருந்து பாதுகாப்பான இடத்துக்கு இடம்பெயருமாறு அறிவித்தல் விடுத்துள்ளோம். குறித்த பகுதிகள் மீட்கப்பட்டதும் அவர்கள் அனைத்து அடிப்படை வசதிகளுடனும் அங்கு மீள்குடியேற்றப்படுவர் - என்றார். (சி)

**கண்ணீர் அஞ்சலி**



*கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் மூத்த உறுப்பினரும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் வலி.கிழக்குப் பிரிவின் ஆயுள்கால உறுப்பினருமான*

**லயன் சு.முத்துக்குமாரசாமி**

*அவர்களின் பாசமிகு மாமி*

**திருமதி மேர்சி கமலம் இராஜசேகரம்**

*அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**கோப்பாய் லயன்ஸ் கழகம்,**
**இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், வலி.கிழக்குப் பிரிவு.**

(78545)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம்,செப்.18

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை காலை 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெற இருக்கும் கலந்துரையாடலில் சகல தொண்டர் ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (55)

## சுழிபுரம் பறாளாய் விவசாயிகள் விதைப்புக்குத் தயார்

சுழிபுரம்,செப்.18

சுழிபுரம் - பறாளாய் வயல் காணிகளில் நெல் விதைப்புக்கான பணிகள் இவ்வாரம் முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. வயல் நிலங்கள் பண்படுத்தப்பட்டு இயற்கைப் பசளைகளும் பயன்படுத்தப்பட்டு நிலத்தைச் செப்பனிட்டு இப்பகுதி மக்கள் விதைப்பிற்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

பறாளாய் நெல் வயல்களில் நிலத்தை கிணற்றுநீர் கொண்டு நனைத்து விதைக்கும் கருமங்கள் செய்து நெற்பயிர்கள் விற்பனை செய்வது ஒரு வழக்கமாகும். மழைக்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் எந்த நேரத்தில் மழை பெய்தாலும் அதற்கேற்றவாறு கருமங்கள் செய்வதற்கு இங்குள்ள விவசாயிகள் ஆயத்தமாகி வருகிறார்கள். (28)

**தவறிவிட்டது**

இராசையா கிரஷாந், ஆவரங்கால் கிழக்கு என்னும் பெயருடைய தே.அடையாள அட்டை (900280394V) கடந்த 15.09.2008 அன்று யாழ்.நாவலர் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 423, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் தரப்படும். (78542)

**ஒத்துமாறல்**

வடமாகாண சுகாதார அமைச்சின் (திருகோணமலை) MANAGEMENT ASSISTANT ஆக வேலை செய்யும் ஒருவர் யாழ். மாவட்டத்தில் வேலை செய்யும் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு: அ.பரஞ்சோதி,
021 222 5656

(78547)

**விளம்பரத்தில் திருத்தம்**

*நன்றி நவில்கின்றோம் என்ற தலைப்புடன் 17.09.2008 உதயன் நாளேட்டில் 2ஆம் பக்கத்தில் வெளிவந்திருந்த விளம்பரத்தின் விளம்பரதாரர்களாக சித்தப்பா, சின்னம்மா என்று குறிப்பிடப்பட்டிருந்தமை தவறாகும். அது சித்தப்பா சின்னமாமா என்று இருந்திருக்கவேண்டும்.*

## கடற்றொழிலாளர் கூ.ச. கட்டமைப்பு வலுவூட்டல் நூல்

நல்லூர்,செப்.18

'கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கட்டமைப்பு வலுவூட்டல்' என்னும் நூல் வெளியிடப்பட்டுள்ளதாகக் கடற்றொழில் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் கூறியதாவது:

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் கடற்றொழில் திணைக்களமும் கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து இந்த நூலை வெளியிட்டுள்ளன. இவ்வாறு ஒரு நூல் வெளியிடப்படுவது இதுவே முதல் தடவை என்றும் அவர் கூறினார்.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி நூலை வெளியிட்டு வைத்தார். யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.சிவலிங்கம், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் (விலங்கியற்துறை), திருமதி சி.குகநாதன், கடல் வள அபிவிருத்தி நிலைய முன்னாள் பணிப்பாளர் கலாநிதி கா.சித்திரவேலு ஆகியோர் கலந்துகொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (111)

**வேலைவாய்ப்பு**

பருத்தித்துறைப் பொதுச்சந்தைக்கான புதிய கட்டட நிர்மாணப் பணி ஸ்தலத்திற்கு கீழ் காணப்படும் பணியாள்கள் நாளாந்த ஊதிய அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்படவுள்ளனர்.


பொருத்தமானவர்கள் 18.09.2008 தொடக்கம் 23.09.2008 வரையான காலப்பகுதியில் நேரில் சமுகமளிக்கவும்.

01. Shuttering Carpenters - *சட்டறிங் வேலை அனுபவமிக்க தச்சுத் தொழிலாளர்கள்.*
02. Bar Benders - *கம்பி வேலை அனுபவமிக்க தொழிலாளர்கள்*
03. Electricians - *அனுபவமிக்க மின் இணைப்பாளர்கள்*
04. Plumbers - *அனுபவமிக்க நீர் குழாய் பொருத்துநர்கள்*

(78543)

தொடர்புகளுக்கு:
முகாமையாளர்,
பொதுச்சந்தைக்கான புதிய கட்டட நிர்மாணப் பகுதி,
பேருந்து நிலையம்,
பருத்தித்துறை.

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



**B.A.ராஜ்குமார்**
(வைகுந்தன் பேக்கரி உரிமையாளர்)

ஆண்டவன் மடியில்
11*10*1983

கொடிய அழிப்பில்
10*09*2006

திதி: திருதியை

*அலிஸ்ரன் என்றழைக்க எம்மனம் ஏங்க - உன்*
*அன்பு மொழிதான் காற்றோடு கலந்ததன்றோ*
*பாசத்துடன் எம்மைக் காத்தவனே - உன்னை*
*பரிதவிக்கச் செய்தவர்கள் தான் யாரோ*
*கயவர்கள் பிடியில் சிக்கிய உன்னை*
*கடவுள் கூட காப்பாற்றவில்லையே*
*தீக்கிரையாகிய உன்னுடல் - இன்று*
*தீயில் சங்கமித்து இரண்டாண்டுகள் முடிந்ததன்றோ!*

வைகுந்தன் பேக்கரி,
ஆறுகால்மடம். (78541)

உன் பிரிவால் துயருறும்:
தாய், சகோதரர்கள்.

**10ஆம் நாள் நினைவஞ்சலி**



அமரர்

**ஸ்ரீலஸ்ரீ கதிர்காமக்குருக்கள்**
**ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள்**
(சந்தன ஐயா)
(இளைப்பாறிய நிர்வாக அலுவலர், இலங்கை உள்ளூராட்சி சேவை )

தோற்றம்
12*10*1931

மறைவு
08*09*2008

உதிர்ந்துவிட்ட பூவாக
மண்ணில் மறைந்துவிட்ட போதிலும் வரணி
இடைக்குறிச்சி மக்களின் மனதில்
உம் நினைவுகள் என்றும் அழியாதவை
எம்மக்களுக்கு என்றோர் மண்டபமும் எம்
அறிவு வளர ஓர் ஐங்கரன் சனசமூக நிலையமும்
உருவாக்க முனைப்பாக பாடுபட்டீர் சமயப் பணியுடன்
சமூகப் பணியையும் முழுமூச்சுடன் செய்து
நிறைவுகண்ட பெருந்தகை சந்தன
ஐயாவென்றால் சமூகம் விழிப்படையும்.

தென்மராட்சிக் கிராம அபிவிருத்திச் சங்க சமாசம், இடைக்குறிச்சி கிராம அபிவிருத்திச் சங்கம், ஐங்கரன் சனசமூக நிலையம், விவசாய சம்மேளனம், கிராமிய புனர்வாழ்வுக் குழு ஆகியவற்றின் தலைவராய் இருந்து அரும்பணி புரிந்து இறைபதம் எய்திய அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(78548)

வரணி இடைக்குறிச்சி கிராம அலுவலர், வரணி இடைக்குறிச்சி சமுர்த்தி அலுவலர்,
வேலுப்பிள்ளை கந்தையா, ஐங்கரன் சனசமூக நிலையம்,
இடைக்குறிச்சி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்.

## தே.க.கல்லூரி செயலமர்வு

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம்காலை9மணிக்கு நடைபெறவுள்ளது. அனைத்து உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார். (55)

## காடுகள்-பற்றைகள் துப்பரவு செய்யப்படுகின்றன

தெல்லிப்பழை,செப்.18

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வயாவிளான் கிழக்கு பிரதேசத்திலுள்ள சுதந்திரபுரம், குட்டியப்புலம், கோணாவளை ஆகிய கிராமங்களில் உள்ள காட்டுப்பிரதேசங்கள், பற்றைகள் போன்றன அக்கிராம மக்களால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

பாதுகாப்புப் படையினர் ஒலிபெருக்கி மூலம் வழங்கிய அறிவித்தலுக்கு அமைவாகவே மேற்படி பிரதேசம் துப்புரவு செய்யப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

*31ஆம் நாள் நினைவஞ்சலியும்*
**நன்றி நவிலலும்**

**திருமதி**
**லீலறோஜினி இராஜகோபாலு**

தோற்றம்
12*12*1944

மறைவு
19*08*2008



கடந்த 19.08.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், எமக்கு உற்றதுணையாக நின்று பல வழிகளிலும் உதவியோருக்கும் எமது இதயம் கலந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (18.09.2008) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மீனாட்சி அம்மன் கோயில் வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.* (சி/554692)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# புலிகளுக்கு எதிரான கூட்டில் ஆசிய வல்லாதிக்க சக்திகள்

ஆசியப் பிராந்தியத்தில் மிக முக்கிய சிக்கல்களுள் ஒன்றாகியிருக்கும் இலங்கை இனப்பிரச்சினை, அதன் விளைவான பெரும் உள்நாட்டுப் போர் ஆகியவை தொடர்பில் ஆசிய வல்லாதிக்க சக்திகளின் ஈடுபாட்டைத் தொட்டுக்காட்டி ஆய்வுக் கட்டுரை ஒன்று நேற்றுக் கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்றில் வெளியாகியிருக்கின்றது.

அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சில அம்சங்கள் சுவாரசியமானவை; கூர்ந்து சிந்திக்கத்தக்க கருத்து நிலைப்பாட்டைக் கொண்டவை.

இந்த ஆசியப் பிராந்திய விடயங்களில் தலைமைத்துவத்துக்கு - பிராந்திய வல்லாதிக்கச் 'சண்டித்தனத்துக்கு' - போட்டியிடுகின்ற பிரதான சக்திகள் இந்தியாவும் சீனாவும் என்பது வெளிப்படையாக யாவருக்கும் தெரிந்த உண்மை.

அதேபோல, இந்திய உபகண்டப் பிரதேசத்திலே தமது செல்வாக்குக்காகத் தங்களுக்குள் முட்டி, மோதிக் கொண்டிருக்கும் பிரதான தரப்புகள் - நாடுகள் - இந்தியாவும் பாகிஸ்தானுமாகும்.

1947 இல் இந்தியாவும், பாகிஸ்தானும் தனித்தனியாகப் பிரிந்து இரு வெவ்வேறு சுதந்திர நாடுகளாக அறிவிக்கப்பட்ட காலத்தில் இருந்தே இந்தியாவும், பாகிஸ்தானும் தங்களுக்குள் பரம வைரிகள் போல - கீரியும் பாம்பும் போல - முட்டியும் மோதியும், இழுபறிப்பட்டும் பழகி வருகின்றன என்பதும் தெரிந்ததே.

பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷைத் தனிநாடாகப் பிரிக்கச் செய்ததிலிருந்துஇந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவு சீர்குலைந்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கறுவிக் கொள்ளும் அளவுக்கு மோசமடைந்திருக்கின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றே. இரு நாடுகளுமே காலாகால எதிரிகள் போலவே பழகிக்கொண்டிருக்கின்றன என்பதும் அறிந்த விடயம்தான்.

ஒரு விவகாரத்தில் பாகிஸ்தான் எடுக்கும் சார்புப் போக்குக்கு மாறான போக்கையே இந்தியா எடுக்கும் என்று துணிந்தும் முற்கூட்டியே அப்பட்டமாகவும் கூற முடியும் என்ற அளவுக்கு அவற்றுக்குள் முரண்பாடு ஆழமானவை.

இவ்வாறு தங்களுக்குள் வேறுபட்டு நிற்கும் இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய முத்தரப்புகளையுமே கொழும்பின் சட்டைப்பைக்குள் கொண்டுவந்து நிறுத்தியிருக் கின்றன சுண்டங்காய்ப்பருமனுள்ளதீவானஇலங்கையின்சாதுரிய அரச நிர்வாகத்தின் தந்திரோபாய அரசியல் நகர்வுகள்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கொழும்பு அரசின் இராணுவ நடவடிக்கைகளில் இந்தியத் தரப்பு நேரடியாகப் பங்குபணி ஆற்றுவது பற்றிய உண்மை கடந்த வாரம் வவுனியா கூட்டுப்படைத் தலைமையகம் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் அம்பலமாயிற்று என்பது தெரிந்ததே.

இதற்கு முன்னரே, புலிகளுக்கு எதிரான போரில் இலங்கைப் படைகளுக்கு ஆயுதத் தளபாட விநியோகம் மற்றும் இன்னோரன்ன உதவிகளைப் பாகிஸ்தானும், சீனாவும் வெளிப்படையாகவே வழங்கிவந்தன என்பது தெரிந்ததுதான்.

இப்போது இந்தியாவின் நேரடி உதவியும் இலங்கைத் தரப்புக்குக் கிட்டுவது வைகோ கூறுகின்றமைபோல 'கையும் களவுமாக'ப் பிடிபட்டு, வெளிப்பட்டுவிட்டது.

ஆக -

இந்து சமுத்திரப் பிரதேசத்தில் தமக்குள் ஆதிக்கச் செல்வாக்குக்காகப் போட்டியிட்டு முட்டிமோதி, கன்னை பிரிந்து நிற்கும் பாகிஸ்தான், சீனா, இந்தியா ஆகிய மூன்று நாடுகளுமே இலங்கையில் புலிகளுக்கு எதிரான போரில் மட்டும் - புலிகளுக்கு எதிராகவும் இலங்கை அரசுக்கு ஆதரவாகவும் - தமக்குள் கைகோர்த்து ஒன்றுபட்டும் - நிற்கின்றன என்பது உறுதியாகியிருக்கின்றது.

அதாவது, இதுவரை தமக்குள் முரண்டுபிடித்து, முட்டிமோதி நிற்கும் இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளை இலங்கை தன்னுடைய தேவைக்கு - புலிகளுக்கு எதிரான போரில் - தனது பக்கத்தில் வரிசையாக ஒன்று சேர அணிவகுத்து நிறுத்தியிருப்பதில் வெற்றி கண்டிருக்கின்றது.

அந்தவகையில், ஆசியாவின் பிராந்திய வல்லாதிக்க சக்திகளைத் தனது பின்னணியில் வரிசையாக ஒன்றுசேர நிறுத்தியிருப்பதன் மூலம், புலிகள் மீதான தனது போரை 'இலங்கையின் யுத்தம்' ஆக முன்னெடுக்காமல் 'ஆசியாவின் யுத்தமாக' ஒன்றுபட்டு முன்னெடுக்க வழி செய்திருக்கின்றது இலங்கை.

இதை -

''இலங்கையின் சட்டைப் பொக்கற்றுக்குள் இந்தியா'' - என்ற தலைப்பிலான கட்டுரையில் அம்பலப்படுத்தியிருக்கின்றார் கொழும்பின் முக்கிய ஊடகவியலாளர் ஒருவர்.

ஈழத் தமிழர் தரப்பின் போராட்ட சக்தியை நசுக்குவதற்காக 'கூடாத கூட்டத்தில் சேர்ந்திருக்கிறது இந்தியா!' - என்பதே அக்கட்டுரையாளர் அம்பலப்படுத்தவரும் உண்மையாகும்.

''இந்தியாவே! இது நியாயமா?'' - என்று புதுடில்லியைப் பார்த்துக் கேள்வி எழுப்புகின்றார்கள் தமிழர்கள்.

அதேசமயம், இப்படி முழு ஆசிய நாடுகளின் கூட்டையே - ஆசியப் பிராந்திய வல்லமையையே - தனித்து ஒருவராக எதிர்கொள்ளப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் எவ்வாறு இயலுகிறது என்ற அக்கட்டுரையாளரின் வியப்பும் இங்கு கவனிக்கத்தக்க விடயமாகிறது.

# வடக்கு மக்களை பயங்கரவாதப் பிடியிலிருந்து மீட்பதற்கான இறுதிக் கட்டத்தை எமது படையினர் அடைந்துள்ளனர்

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா கூறுகிறார்

கொழும்பு,செப்.18

வடக்கு மக்களைப் பயங்கரவாதப் பிடியில் இருந்து மீட்பதற்கான மனிதநேய இராணுவ நடவடிக்கையின் இறுதிக்கட்டத்தைப் படையினர் அடைந்துள்ளனர்.

அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய அபிவிருத்தி தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் தெரிவித்ததாவது:-

பாரிய அழிவுகளில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு மக்களிடையே விழிப்புணர்வு மிகவும் அவசியம். அரசு எவ்வளவுதான் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்கின்றபோதிலும் மக்கள் விழிப்புணர்வுடன் இல்லாது இருந்தால் அவை பயனற்றுவிடும்.

படையினரின்இந்தமுன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக பயங்கர வாதிகள் எந்தவகையிலும் செயற்படக் கூடும்.

பயங்கரவாதிகளின் தாக்குதல்களிலிருந்து தவிர்ந்துகொள்ள மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும்.

படையினரின் கண்ணெட்டும் தூரத் தில் கிளிநொச்சி உள்ளது. இரு மாவட் டங்களின் சில கிராமசேவகர் பிரிவுகளேஇன்னும்மீட்கப்படவேண்டியுள்ளன.

இது தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவ முன்னெடுப்பன்று.

தமிழ் மக்களை மீட்பதற்கானது.

யாழ். மாணவர்கள் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்தபோது அவர்களை ஜனாதிபதி வரவேற்ற விதம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

பயங்கரவாதிகளையும் தமிழ் மக்களையும் அரசு வெவ்வேறாகவே நோக்குகிறது - என்றார். (203)

## வாராந்த நிகழ்வுகள்

வடமராட்சி,செப்.18

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெள்ளிக்கிழமை தோறும் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பெரியபுராணம் தொடர் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றவுள்ளார்.

(203-236)

* * *

வடமராட்சி,செப்.18

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெற்றுவரும் ஆன்மீக நிகழ்வில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'ஆன்மீகப் பாதையில்' என்னும் தலைப்பில் இ.இராசநாதன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (203-236)

## வன்னியில் அல்லலுறும் உறவுகளுக்கு யாழ் .குடாநாட்டு மக்கள் நிதி உதவி

### ஆயர் இல்லம் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டது

கொழும்பு, செப் 18

வன்னிப் பிரதேசத்தில் இடம் பெயர்ந்து அல்லலுறும் மக்களுக் கென குடாநாட்டைச் சேர்ந்த மக்கள் 18 லட்சம் ரூபா நிதியை சேகரித்து அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ். ஆயர் இல்லம் ஊடாக இந்த நிதி வன்னிக்கு அனுப்பப் பட்டு அங்கு மக்களின் நலன்களைக் கவனிக்கும் குருக்கள், துறவி கள் மூலம் மக்களுக்கு வழங்கப் பட்டு வருகின்றது.

வன்னியில் வாழும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன் வருமாறு யாழ். மறைமாவட்ட நீதி, சமாதான ஆணையம் பங்குத் தந்தையர்கள் ஊடாக விடுத்த வேண்டுகோளுக் கமைய மக்கள் உதவிகளை வழங்கியி ருந்தனர்.

பங்குத் தந்தையின் இந்த வேண்டுகோளை ஏற்று மத வேறுபாடு இன்றி அனைத்து மக்களும் தம்மாலான உதவிகளை வழங்கியிருந்தனர்.

வன்னிப்பிரதேசத்தில் துன்பப்படும் மக்களின் துயர் துடைக்க உதவ வேண்டுமென விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று நிதியுதவி செய்த மக் களுக்கு நிதிசேகரிப்பில் ஈடுபட்ட பங்குத் தந்தையர்க ளும் யாழ். மறை மாவட்ட நீதி, சமா தான ஆணையகத்தினரும் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

(203)

## பிரதேச செலகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் அடுத்த மாதமே இடம்பெறும்

யாழ்ப்பாணம், செப்.18

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கிடையே எதிர்வரும் 20 ஆம் 21 ஆம் திகதிகளில் நடத்தப்படவிருந்த தடகள விளையாட்டுப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி. ஏ.எவ்.ஜே.ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகள் ஒக்ரோபர் 4 ஆம் 5 ஆம் திகதிகளில் இடம்பெறும் என்று அவர் மேலும் கூறினார். (203)

## கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் 15 ஆயிரம் மரக் கன்றுகள் இன்று விநியோகம்

யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் 'நாம் பயிரிடுவோம் தேசத்தை வளப்படுத்துவோம்' என்னும் திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் பயன்தரும் மரக்கன்றுகளை வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் புலோலி கமநல சேவை நிலையத்தில் நடை பெறவுள்ளது.

திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந் தினராகக் கலந்துகொள்வார்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், மருதங்கேணி உதவி அரச அதிபர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார், யாழ்.மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) எஸ்.சிவகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் 10 ஆயிரம் பலாக் கன்றுகளும் 5 ஆயிரம் மாங்கன்றுகளும் மக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, செப்.18

சங்கானைக் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம் பெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 14, 16 வயதுப்பிரிவினர்களுக்கான அரையிறுதி ஆட்டங்களில் இன்று நண்பகல் ஒரு மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

**14 வயதுப் பிரிவு**

*அராலி கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

*வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர்அராலி வள்ளியம்மை ஞாபகார்த்தப் பாடசாலை.

**16 வயதுப் பிரிவு**

*அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் எதிர்சுழிபுரம்விக்ரோறியாக்கல்லூரி.

*வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி. (203-86)

* * *

வலிவடக்கு , செப். 18

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம் பெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி யில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

**13 வயதுப் பிரிவு**

*சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம்.

*கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் எதிர் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.

**16 வயதுப் பிரிவு**

*சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

*இணுவில் இந்துக்கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 03 | 19.09.2008 வெள்ளிக்கிழமை |
| திதி: | சதுர்த்தி மு.ப. 09.12வரை |
| நட்சத்திரம் : | பரணி மு.இ. 8.13வரை |
| சுபநேரம் : | 06.03 - 07.33 |
| ராகுகாலம் : | 10.33 - 12.03 |

## பேக்கரி உரிமையாளர் சங்க 17 ஆவது ஆண்டு நிறைவுவிழா

யாழ்ப்பாணம்,செப்.18

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர்சங்கத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்குச் சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

தலைவர் மா.நாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.செயலக புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகவும் கொமர்ஷல் வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக் கிளை முகாமையாளர் எஸ்.ரவீந்திரா, மக்கள் வங்கியின் யாழ்.பிரதான வீதிக் கிளை முகாமையாளர் வி.எஸ். முதலி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.(203)

## கிராம அலுவலர்களைத் தரம் உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.18

கிராம அலுவலர்களைத் தரம் II இல் இருந்து தரம் I இற்குப் பதவி உயர்த்துவதற்கான 2008 ஆம் ஆண்டுக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

கொழும்பு, கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம், வவுனியா, அம்பாறை, குருணாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் அமையவுள்ள பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடத்தப்படவுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளதாகப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

(203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*கமத்தொழில் அபிவிருத்தி கமநல சேவைகள் அமைச்சின் சேதனப் பசளையை ஊக்குவிக்கும் வாரத்தையொட்டி புலோலி கமநலசேவை நிலை யத்தில் விவசாயக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.*

*கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை முதலாவது படத்திலும் -*

*பெரும்பாக உத்தியோகத்தர் ச.உருத்திரேஸ்வரன் தலைமையுரை நிகழ்த்துவதையும், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர் சி.சிவரூபன், பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி சி.வசீகரன், யாழ்.பல்கலைக்கழக விவசாய விரிவுரையாளர் ப.செல்வக்குமார் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.*

*(படங்கள் : கர்ணன்)*

# அச்சுறுத்தல் காரணமாக திருமலை இளைஞர்கள் இடம்பெயருகின்றனர்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தம்பலகாமம், பொற்கேணி ஆகிய கிராமங்களிலிருந்து தமிழ் இளைஞர், யுவதிகள் அச்சுறுத்தல் காரணமாக வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அடையாளம் தெரியாத ஆயுதக் குழுக்களினால் இளைஞர்கள் கொலை செய்யப்படுவதும் - வெள்ளை வானில் கடத்தப்படுவதும் - காணாமல் போவதும் இப்பகுதிகளில் அதிகரித்துள்ளன. இதனை அடுத்தே இளைஞர், யுவதிகள் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்கின்றனர் என அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (சி)

# வவுனியா படைத்தளம் மீதான தாக்குதலில் உண்மையில் இந்தியப் படைகளுக்கு காயமா?

கொழும்பு, செப். 18

அண்மையில் வவுனியா படைத்தலைமையகம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இந்தியர் எவருஃம காயமடையவில்லை - என்று இராணுவப் பேச்சாளர் உதயநாணய்க்கார தெரிவித்திருக்கிறார்.

பி.பி.ஸி. செய்திச் சேவையில் நேற்று மூன்தினம் கேட்டகேள்வி ஒன்றுக்கு பதிலளித்த போதே இராணுவப் பேச்சாளர் இப்படிக் கூறியிருந்தார்.

உதயநாணக்கார அந்தப் பேட்டியில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

இந்தத் தாக்குதலில் இந்தியர் எவரும் காயமடையவில்லை என உறுதியாகக் கூறுகின்றேன். அந்த இடத்தில் இந்தியர் யாரும் இல்லை. இந்தியர்கள் காயமடைந்தனர் என்று உங்களுக்கு இந்தியத் தூதரகத்தில் இருந்து தெரிவிக்கப்பட்டால் நீங்கள் அவர்களிடமே மேலதிக விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் - என்றார். (சி)

# தொழில்நுட்ப, நாகரீக மாற்றங்களுக்கேற்ப மனிதன் அறிவு, ஆற்றல்களை மேம்படுத்த வேண்டியது அவசியம்

## கணனி அறிவு இதற்கு இன்றியமையாதது என்கின்றார் முகாமைத்துவத்துறைப் பேராசிரியர்

மந்திகை,செப்.18

விஞ்ஞான தொழில்நுட்ப, நாகரீக மாற்றங்களுக்கேற்ப மனிதன் அறிவு ஆற்றல்களை மேம்படுத்த வேண்டும். கணனியின் வளர்ச்சி இன்று மனித வாழ்வுடன் பல்வேறு துறைகளிலும் பின்னிப் பிணைந்துள்ளன. கணனி பற்றிய முழுமையான அறிவைப் பெற்றுக் கொள்ளாத மனிதன் வாழ முடியாது என்ற நிலைக்கு தள்ளப்பட்டு விடுவான்

மேற்கண்டவாறு யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவத்துறைப் பேராசிரியர் எம். நடராஜசுந்தரம் குறிப்பிட்டார். புலோலி குளோபல் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் முதலாம் ஆண்டு பூர்த்தி விழாவிலும் சான்றிதழ் வழங்கும் விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட காணிப் பதிவக முகாமைத்துவ உதவியாளர் பீ.ரமேஸ் தலைமையில் விழா நடைபெற்றது. தொடர்ந்துரையாற்றிய பேராசிரியர் நடராஜசுந்தரம் குறிப்பிட்டதாவது;

சமயம் ஒரு காலத்தில் தொழில் நுட்ப வளர்ச்சியில் பாரிய தாக்கத்தினைச் செலுத்தி வந்தது. எல்லாச் சமயங்களும் தொழில் நுட்ப வளர்ச்சிக்குத் தடை விதிப்பவனவாகவே இருந்து வந்துள்ளன. இதனால் தங்களுடைய சமயம் கருத்தற்றுப் போகுமோ என்று அஞ்சவேண்டிய நிலை இருந்தது. ஆனால் சைவசமயம் அக்காலத்திலேயே உலகம் எவ்வாறு அமைந்துள்ளது. கிரகங்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதையெல்லாம் இங்கிருந்தவாறே ஆராய்ந்து அறிந்து எழுதியிருக் கின்றது. இவற்றினை எங்களிடமிருந்து காலச் சூழ்நிலைக்கேற்ப எடுத்துச் சென்ற வெள்ளைக்காரர்கள் அதனூடாக தங்களுடைய அறிவினை வளர்த்தனர். அதனூடு தோன்றியது தான் கணனிகள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இன்றைய உலகம் தகவல் தொழில் நுட்ப உலகமாக மாறிவிட்டது. இதனால் உலகம் ஒரு கிராமமாக சுருங்கிவிட்டது. பல்வேறு தொடர்புகளும் வேகமாகச் செயற்படுகின்றன. இத்தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி வங்கித்துறை, ஆராய்ச்சித்துறை, கல்வித்துறை, தொடர்பு சாதனத்துறை ஆகிய சகல துறைகளிலும் புகுந்து விட்டது. எனவே இன்றைய மாணவ உலகம் இதற்கு ஈடுகொடுக்கும் விதத்தில் தமது அறிவு, ஆற்றல் களை மேம்படுத்த வேண்டும். இதில் பெற்றோர்களின் பங்கு மிக அளப் பரியது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் சேவை கள் எதிர்காலச் சந்ததியினரை தயார் படுத்த மிக இன்றியமையாதனவாகின்றன.

தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் சமூகத்தின் தேவைகளை அறிந்து சமூகத்தை சரியாக வழிப்படுத்தும் போது அறிவு ஆற்றல்களால் மேம்பாடடைந்த புத்தி ஜீவிகளை உருவாக்க முடியும் - என்றார்.

தென் புலோலி புற்றளை மகா வித்தியாலய அதிபர் எம்.அனந்தேஸ்வரன், நெல்லியடி வர்த்தக வங்கி உதவி முகாமையாளர் எம்.மணிவண்ணன், ஓய்வுபெற்ற அதிபர் தர்மலிங்கம் (ஜே.பி) பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக அதிகாரி கே.முருகையா ஆகியோர் இவ் விழாவிலே சிறப்புவிருந்தினர்களாகக்கலந்து கொண்டனர்.

கணனிப் பயிற்சி பெற்று வெளியேறிய இளைஞர் யுவதிகளுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

(202-218)

# போற்றப்பட வேண்டிய பெண்கள்

*ஜனக மகாராஜர் யாரிடமிருந்து அறிஞர் பட்டம்பெற வேண்டும் என்று அறிய விரும்பினார். யாக்ஞவல்கியர் போன்ற பேரறிஞர் இருந்தாலும், கார்க்கியிடமிருந்தே அறிஞர் பட்டம் பெற்றார். யோகிகள், முனிவர்கள், சாதுக்கள் அனைவரும் அக்காலத்தில் பெண்களைப் போற்றினர். சுயலாபம், சுயநலம் காரணமாக ஆண்மகன் பெண்களைச் சிறிது சிறிதாக அவமரியாதை செய்யத் தொடங்கினான். சாதாரண ஆண்மக்கள் மட்டுமல்ல, சந்நியாசிகள் என்று கூறப்படுவோர், சான்றோர் என்று கூறப்படுவோர் அனைவரும் பெண்களை அவமதிக்கத் தொடங்கினர். மதங்கமகரிஷி, சபரியை ஆசிரமத்தில் சேர்த்துக்கொண்ட போது பல ரிஷிகள் கண்டனம் தெரிவித்தனர். சபரி சற்குணவதி, ஒழுங்கான நியமங்களைப் பின்பற்றுபவள். சீலம் மிகுந்தவள். சபரி மிகவும் உன்னதமானவள் என்று மதங்கர் அறிவார். ஆகவே அவர் அவளைத் தன் ஆசிரமத்தில் சேர்த்துக் கொண்டார். பெண்ணின் கற்பையும், சீலத்தையும் பற்றி புரிந்து கொள்வதற்கும் தகுதி வேண்டும்.*



*கலியின் கொடுமையால், தற்காலக் கல்வியின் காரணமாக, பெண்களை விளையாட்டுக் கருவிகளாகவும், பொம்மைகளாகவும் கருதுகிறார்கள். இது சரியல்ல. பெண்கள் மட்டுமே, உண்மையான இலட்சியங்கள். நாட்டில் மங்கலகரமான நற்குணங்கள் நிரம்பப் பெற்றவர்கள். இந்த உண்மையைப் புரிந்து கொள்ள மக்கள் முயற்சி செய்யவில்லை. அவ்வாறு தெரிந்து கொண்டவர்களும் அவர்களை அலட்சியம் செய்தனர். இது மனிதனின் முழுமையான கவனக்குறைவான செயல். பெண்கள் நான்கு சுவர்களுக்குள் சிறைப்பட்டு சமையல் வேலை செய்பவர்களாகவே நடத்தப்பட்ட வர்கள். அவர்களது திறமைகளும், வலிமையும்ஆற்றலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவர்களது பணியை மட்டும் மனிதன் பயன்படுத்திக் கொண்டான்.*

## சாயி சிந்தனை

# இரத்ததானம் - ஓர் மகத்தான ஆன்மீக சாதனை

இரத்ததானம் நாம் ஒவ்வொருவரும் சமூகத்திற்குச் செய்ய வேண்டிய தார்மீகக் கடமையாகும். இது ஓர் உயர்ந்த ஆன்மீக சாதனையுமாகும். இரத்தம் அன்புத் திரவம் என்று பகவான் சத்திய சாயிபாபா கூறியுள்ளார். இரத்ததானம் தன்னலமற்ற தூய்மையான சேவை. சிறந்த தர்ம யோகமுமாகும். இறைநாம ஜெபத்துடன் தானம் செய்யும்பொழுது உயரிய அதிர்வலைகள் குருதியைப் பெறுபவரின் ஆரோக்கியத்தைக் கூட்டுகிறது. மேலும் அவரின் மனதைத் தூய்மைப்படுத்துகிறது. உயிரையும் காத்துவிடுகிறது.

நாம் கொடை செய்யாவிட்டாலும், குருதியிலுள்ள செல்வணுக்கள் முதுமையடைந்து 120 நாள்களில் அழிக்கப்பட்டுவிடுகின்றன. ஆகவே நாம் அழிக்கப்படுமுன், மற்றையோருக்கு உதவுபவராக இருக்க வேண்டுமென்ற ஆன்மீக சிந்தனையின் அடிப்படையில், எமது உடலில் ஓடும் குருதியில் 10 வீதத்தை மூன்று மாதத்திற்கு ஒரு தடவை தானம் செய்யலாம்.

கொடுப்பவருக்கு இதனால் ஒரு கெடுதியுமில்லை. குருதி பல சோதனைகளுக்குப் பின்னர் தேவையானவருக்கு ஏற்றப்படுகின்றது. பாரிய பிரச்சினை எதுவும் ஏற்படாமல் குருதித்தானம் செய்யப்படுகின்றது.

குருதிக்கொடை செய்ய ஒருவர் தகுதியா இல்லையா என்பதை இரத்த வங்கி வைத்தியர்கள் தீர்மானிப்பார்கள். எமது கடமை, தானம் செய்ய முன்வருவதேயாகும். பகவான் சத்திய சாயி பாபா, குருதிக் கொடையின் உன்னதத்தை உணரச் செய்வதற்காக அகில உலக இரத்ததான நாளாகச் செப்ரெம்பர் மாதத்தில் வரும் 15ஆம் திகதியைப் பிரகடனப்படுத்தியுள்ளார். வட பிராந்தியத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 21ஆம் திகதி இரத்ததான நிகழ்வை யாழ்.பல்கலைக்கழகம் முன்பாகவுள்ள ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. இது காலை 9 மணிமுதல் நண்பகல் வரை நடைபெறும்.

அன்பை அள்ளி வழங்க வாருங்கள்.

மருத்துவப் பகுதி

*சத்திய சாயி சேவா நிறுவனம்,வடபிராந்தியம்*

# வடபகுதியிலிருந்து கொழும்பு சென்றோர் பொலிஸில் 21 ஆம் திகதிக்குள் பதிவுசெய்யவேண்டும்

கொழும்பு,செப்.18

வட பகுதியிலிருந்து பல்வேறு காரணங்களின் நிமித்தம் கொழும்பு மற்றும் மேல் மாகாணங்களில் தற்காலிகமாக தங்கியிருக்கும் பொதுமக்கள் அனைவரையும் இம்மாதம் 21 ஆம் திகதிக்குள் அந்தந்த பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து கொள்ளுமாறு பொலிஸ் தலைமை அலுவலகம் கேட்டிருக்கின்றது.

பொலிஸ் தலைமையகம் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

வடமாகாணத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் படை நடவடிக்கைகள் மூலம் கிடைக்கின்ற வெற்றிகள் காரணமாக பயங்கரவாதிகளின் பிடியிலுள்ள பிரதேசங்களில் இருந்து தினந்தோறும் அரசு கட்டுப்பாட்டுப்பகுதிக்கு மக்கள் வருகின்றனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வன்னியின் ஏனைய பகுதிகளில் இருந்தும் பல்வேறு காரணங்களினால் இடம்பெயர்ந்து மக்கள் கொழும்பு, மற்றும் மேல்மாகாணங்களில் உள்ள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தங்கியிருக்கின்றனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு தற்காலிகமாக வசிப்பவர்களை கணக்கிட்டு அவர்களை பொலிஸில் பதிவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வரும் மக்கள் தற்காலிகமாக வசிக்கும் பிரதேசத்திற்குட்பட்ட பொலிஸ் நிலையங்களில் குடும்ப உறுப்பினர்கள் சகிதம் வந்து தற்காலிக வசிப்பிடத்தை பதிவு செய்துகொள்ள வேண்டும். எதிர்வரும் 21 ஆம்திகதி காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை இப் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சகலவிதமான ஆவணங்களை எடுத்துவருவதன் மூலம் காலதாமதமின்றி பதிவினை மேற்கொள்ள முடியும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-சி)



சாயிபாபாவின் பக்தர்கள் இரத்ததானம் செய்யும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்.பற்றிக்ஸ், யூனியன் கல்லூரிகளுக்கு இடையில் நடைபெற்ற நேற்றைய ஆட்டத்தின் சில காட்சிகள்..

## இறுதிவரை விறுவிறுப்பாக நடந்த

# பாடசாலைகள் 15 வயதுப் பிரிவு இறுதியாட்டம் சென்.பற்றிக்ஸை வென்று அசத்தியது யூனியன்

வலி.வடக்கு, செப்.18

பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அபாரமாக ஆடி சம்பியனாகி அசத்தியது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு எதிரான இறுதியாட்டத்தில் அந்த அணியின் வீரர்களான நோபேட், தேவநாத் ஆகியோர் அபாரமாக ஆடியபோதும், யூனியன் கல்லூரி அணித் தலைவர் இராகுலனின் துடுப்பாட்டம், பந்துவீச்சு ஆகியன வெற்றி இலக்கை அடையவைத்தன.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கி அனுசரணையுடன் 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் பெரும் போராட்டத்தின் பின் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

பூவா தலையா போட்டதில் வெற்றி பெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர் மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 37.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

29 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்து இருந்த நிலையில் நான்காவது துடுப்பாட்ட வீரனாக இறங்கிய அணித்தலைவர் இராகுலன் பொறுமையான துடுப்பாட்டத்தின் மூலம் 50 ஓட்டங்களைப்பெற்று அணியின் ஓட்ட எண்ணிக்கை 94 ஆக இருந்த வேளையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த வீரர்கள் பொறுமையாக விளையாடாத நிலையில் 06 விக்கெட்டுக்களை 16 ஓட்டங்களுக்குள் இழந்து வெளியேறினார்கள்.

இராகுலன் 69 பந்துகளில் ஐந்து நான்குகளுடன் 50, பானுசன் இரண்டு நான்குகளுடன் 14, மதனகோபி 16, ஜோய் கிறேசியன் 13 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 11 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய நிலக்சன் 9.2 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 21 ஓட்டங்களுக்கு நாலு விக்கெட்டுக்களையும் தவநாத் 08 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 16 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் அஜித்டார்வின் 03 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 04 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் நிதர்சன் 04 ஓவர்கள் பந்து வீசி 05 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

மிகவும் குறைந்த ஓட்ட இலக்கான 111 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதி லுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் இராகுலனின் பந்து வீச்சில் ஆறு ஓட்டங்களுக்குள் ஆட்ட மிழந்து வெளியேற சென். பற்றிக்ஸ் கல்லூரி தடுமாறிய நிலையில் காணப்பட்டது.

தொடர்ந்து நிலக்சன் பொறுமையாக விளையாடி ஓட்ட எண்ணிக்கையை அஜித்டார்வினுடன் இணைந்து அதிகரித்த நிலையில் நிலக்சன் ஆட்டமிழந்தார்.

நண்பகல் மதிய வேளையின் பின்னர் நான்காவது விக்கெட்டை 67 ஓட்டங்களுக்கு இழந்தது. தொடர்ந்து 77 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய வேளையில் இணைந்து கொண்ட இறுதி ஆட்ட வீரர்களான றோபேட், தேவ நாத் மிகவும் பொறுமையுடன் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கத் தொடங்கினார்கள்.

இருவரும் மிகவும் பொறுமையாக விளையாடி ஓட்ட எண்ணிக்கையை மிகவும் மெதுவாக அதிகரித்து 108 ஓட்டங்களுக்கு கொண்டுவந்து வெற்றி வாய்ப்பு யாருக்கு என்று இரு அணிகளும் பதட்டமான நிலையில் நின்ற வேளை றொபேட் பொறுமை இழந்து நான்கு பெறும் முயற்சியில் பந்தை தூக்கி அடிக்க அதனை மிகவும் லாவகரமாக எல்லைக் கோட்டுக்கு அண்மையாக நின்ற சிந்தாகரன் பிடி எடுக்க யூனியன் கல்லூரி வெற்றி பெற்றது.

நிலக்சன் இரண்டு நான்கு ஒரு ஆறுடன் 27, அஜித்டார்வின் இரண்டு நான்குடன் 16, றோபேட் இரண்டு நான்குடன் 20, நிதர்சன் 13 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 24 ஓட்டங்களும் பெறப்பட்டன.


யூனியன் கல்லூரி சார்பில் பந்து வீசிய சிலோஜன் 08 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 31 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டையும், இராகுலன் 10 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டையும், சித்தாகரன் 06 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், பானுஜன் 2.1 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வீரன் கே.இராகுலன் ஆட்டநாயகன், சிறந்த துடுப்பாட்ட வீரன், சுற்றுப் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரனாக தெரிவு செய்யப்பட்டார்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த நிலக்ஷன் சிறந்த பந்து வீச்சாளராகவும், றோபேட் சிறந்த களத்தடுப்பாளராகவும், சுற்றுப் போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராக கலாஸ்கரனும் தெரிவுசெய்யப்பட்டார்கள். (1-86)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
19 ★ 12 ★ 1940



மறைவு
02 ★ 08 ★ 2008

உயர்திரு. அமரர் *சிதம்பரப்பிள்ளை கணேசன்*

(ஓய்வுபெற்ற ஆசிரியர், சமாதான நீதிவான் - J.P
உரிமையாளர் - மோகன்ஸ் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி)

எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், மரணச் சடங்கிலும் கலந்துகொண்டு பல வகைகளிலும் உதவிகள் வழங்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் நாளை (19.09.2008) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு:-அன்னாரின் இறுதி நிகழ்வில் பங்குகொண்ட பலரது முகவரிகள் எமக்குத் தெரியாதிருப்பதால் தயவுசெய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இன்றைய நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மோகன்ஸ்,
பிரதான வீதி,
நெல்லியடி.

(A)

துயரில்
மனைவி, மகன், மகள்மார்,
மருமகன்மார், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.நகரில் கூடைப்பந்தில் முன்னணியில் நின்றோம்
மாகாணத்தில் பங்குபற்ற ஆவல் கொண்டோம்
திறனை வெளிப்படுத்த பயணமதில்தடைகள்
கைகொடுக்க சமூக சேவை அமைச்சு நாமுள்ளோம்
இனிப்பான செய்தி செயல்வடிவமானது
பயணம், தங்குமிடம், உணவு, மருத்துவம்,
நீண்ட பணி கண்டு உறைந்தோம்
நன்றியால் நாவசைத்து நிற்கின்றோம்-தங்களால்
மாகாணத்தில் முதலிடத்தை சுவீகரித்தோம்
தேசிய மட்டத்தில் கொழும்பு பாடசாலைக்கு சளைக்காது செயற்பட்டோம்
பட்டறிவு பெற்றோம்
கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களே,
உங்களுக்கும் உங்கள் செயற்குழு வினருக்கும்
கரம் கூப்பி நன்றி நவில்கின்றோம்.

(78555)

பாடசாலைச் சமூகம்,
யா/திருக்குடும்ப கன்னியர்மடம்.


## நவராத்திரி விழா

கன்னாதிட்டி காளியம்பாள் ஆலயத்தில் நவராத்திரி விழா இம் மாதம் 30 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 9 ஆம் திகதி வியாழக் கிழமை விஜயதசமி நடைபெறும்.


## உடனடி வேலை வாய்ப்பு

கணனித்துறையில் Adobe Premiere, Photo Shop, CD/DVD writing அனுபவம் உள்ளவர்கள் 19.09.2008 வெள்ளிக்கிழமை 9 மணிக்கு நேரில் சமுகம்தரவும்.

பொருத்தமான வேதனம் நேரில் பேசித் தீர் மானிக்கலாம்.

வீடியோ கலாமினி,
அச்சுவேலி.


## திருத்தி வாசியுங்கள்

நேற்றைய உதயன் 13 ஆம் பக்கத்தில் பிரசுரமான-

மாரிமுத்து இராசலிங்கம் அவர்களின் மறைவுக்கு **IIS City Campus HND VIII** மாணவர்கள் அஞ்சலி தெரிவித்து வெளியிட்ட கண்ணீர் அஞ்சலியில் -

**HND VII** மாணவர்கள் என்று தவறுதலாக அச்சாகி விட்டது. திருத்தி வாசிக்கக் கேட்டுக் கொள்கின்றோம்.


## மரண அறிவித்தல்

திருமதி *சின்னத்துரை ராசமணி*



ஐங்கரன் வீதி, சுதுமலையைப் பிறப்பிடமாகவும், கட்டுவனை நிரந்தர முகவரியாகவும், உடுவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ராசமணி 16.09.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி-பஞ்சாரம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், தனபாலசிங்கம், புஸ்பமலர்(பிரான்ஸ்), அரியமலர், தவராசா, தெய்வேந்திரம் (பிரான்ஸ்), இராசமலர், விஜயமலர், ஜீவமலர், உதயமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரி, தம்பித்துரை(பிரான்ஸ்), தங்கராசா, சர்வானந்தா, லதா(பிரான்ஸ்) காலஞ்சென்றவர்களான சிவவடிவேல், ரவிச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2008) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் தெற்கு. (78559)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவில் கரை ஒதுங்கிய இந்தியரின் சடலத்தை பொறுப்பேற்க உறவினர்கள் இங்கு வருகிறார்கள்

நெடுந்தீவுக் கடற்கரையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கரை ஒதுங்கிய இந்தியப்பிரஜை ஒருவரின் சடலத்தைப் பொறுப்பேற்க அவரது உறவினர்கள் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

பட்டேல்கோவிவாஸ் என்பவரின் சடலமே கரை ஒதுங்கியிருந்ததாகும். ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவனின் உத்தரவின் பேரில் அந்தச் சடலம் யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் கரையொதுங்கிய சடலத்தைப் பொறுப்பேற்க அவரது உறவினர்கள் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர் என்றும் - அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குமாறும் - கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு நேற்று அறிவித்துள்ளது.

சடலத்தை இந்தியாவுக்கு எடுத்துச் செல்லாமல் இந்து சமய முறைப்படி யாழ்ப்பாணத்திலேயே தகனஞ்செய்ய உறவினர்கள் விரும்புவதாகவும் இந்திய தூதரகம் அறிவித்துள்ளது. (அ-1)

# அமைச்சர் மேர்வின் சில்வாவின் மெய்க்காவலர் மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பை அண்டியுள்ள கடவத்த, கிறிமரியாறப் பகுதியில் உள்ள அமைச்சர் மேர்வின் சில்வாவின் மெய்ப்பாதுகாவலர் ஒருவரின் வீடு மீது நேற்றுக்காலை இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

மஞ்சுள என்ற மெய்ப்பாதுகாவலரும் இன்னும் சிலரும் அவரது வீட்டிற்கு வெளிப்புறத்தில் இருந்து சீட்டு விளையாடிக் கொண்டிருந்த சமயம் அங்கு வந்த மூன்று இனந்தெரியாத நபர்கள் அவர்கள் மீது பரவலாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். அதில் மேர்வின் சில்வாவின் மெய்ப்பாதுகாவலரான மஞ்சுள தப்பிவிட்டார். அவருடன் சீட்டு விளையாடிக்கொண்டிருந்தவர் கொல்லப்பட்டார்.

காயமடைந்தவர்கள் மூவரும் றாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## அரச ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலில் காயமடைந்த எஸ்.மகேந்திரன் என்பவர் முதலில் வட்டக்கச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டார். அவருடைய மகளான ம.கனகாம்பிகை (வயது - 15) என்பவர் அதிர்ச்சிக்குள்ளான நிலையிலும் அக்கராயன் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வட்டக்கச்சியில் வசிக்கும் மலர்ராஜன் அனுசன் (வயது-14) என்பவர் காயமடைந்த நிலையிலும் வட்டக்கச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விமானத் தாக்குதல் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் வட்டக்கச்சியில் தங்கியிருந்தனர். அந்த இடத்தில்தான் நேற்றைய தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

அதேவேளை, இத்தாக்குதல் வட்டக்கச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைவரின் மறைவிடம் ஒன்றின் மீது நேற்றுக்காலை 6.25 மணியளவிலும், முல்லைத்தீவு, உடையார் கட்டுப்பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய தளம் மீது காலை 6.30 மணியளவிலும் தாக்குதல் நடத்தப்பட்டதாக படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டது. (சி)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குளம், அம்பாள் நகர், திருவையாறு மேற்கு, ஊத்துப்புலம், புதுமுறிப்பு ஆகிய 14 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 6, 500 குடும்பங்கள் கடந்த இரு தினங்க ளில் இடம்பெயர்ந்துள்ளனர்.

முறிகண்டியில் இருந்து 55 ஆம் கட்டை வரையான முழு நீளப் பிரதேசத்தில் உள்ள சகல கிராமங்களில் இருந்தும் எல்லா மக்களும் இடம்பெயர்ந்து விட்டனர்.

அந்தப் பகுதி மக்கள் கண்டாவளை நோக்கியே இடம்பெயர்ந்துள்ளனர். அங்கு போதிய கட்டட வசதிகள் இல்லாததால் மக்கள் வீதியோரங்களிலும் மரங்களுக்கு கீழும் தங்கியுள்ளனர்.

அவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதில் பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளோம் - என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. மற்றும் தொண்ர் அமைப்புகள் அரசின் கோரிக்கையின் பேரில் அங்கிருந்து வெளியேறிவிட்டன.

ஆகவே மக்களுக்கான பாதுகாப்பு, உணவு, குடிதண்ணீர், சுகாதார வசதிகளை வழங்க வேண்டிய முழுப் பொறுப்பும் அரசுக்கே உண்டு.

இடம்பெயர்ந்த மக்களின் அவலங்களை ஆயர்கள் இருவர் ஏற்கனவே அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஒன்று அல்லது இரண்டு யுத்த சூனிய வலயங்கள் அமைக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் அங்கேயே தங்க ஏற் பாடு செய்யவேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜெயபுரம், அக்கராயன் ஆகிய பகுதிகளை யுத்த சூனிய வலயங்களாக உடன் பிரகடனம் செய்ய வேண்டும்.

அங்கு தங்கும் மக்களுக்கு அரச அதிபர் தேவையான உவிகளை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அரசு விரைந்து செயற்பட்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும்.

அவசர உதவிகளை ஐ.நா. முகவர்கள் அவர்களுக்கு வழங்க அரசு அனுமதிக்க வேண்டும்.

ஐ.நாவும் சர்வ தேச சமுகமும் அகதிகளின் நிலை குறித்து கவனம் செலுத்த வேண் டும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-1)

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
CHEMISTRY 2010 A/L
அடிப்படை இரசாயனம் பிரிவு - II
ஆரம்பம் - 20.09.2008
Sat, Sun - 12.30-2.00 p.m
By - RAJAH

A/L PHYSICS
BY:-S.GOWTHAMAN
=> With prepared questions T.P.0776634031
=> 09 Batch-புலங்கள்(மின்புலம்) Sat 1:15p.m
=> 10 Batch-பொறியியல்,அலைகளும்அதிர்வும் Sat 2:30p.m
=> ஏனைய பாட அலகுகள், Exam, Paper class விரைவில்.....
(20/09/08 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்க)
VICKNAA TUTION CENTRE
417, K.K.S Road, Jaffna.
(யாழ்/இந்துக் கல்லூரிக்கு அருகில்)

# தனுஷ்கோடியில் படகு கவிழ்ந்து நீந்திக் கரை சேர்ந்த அகதி கைது

தனுஷ்கோடிக் கடலில் மண்டபத்திலிருந்து இலங்கை வந்த அகதிகளின் படகு மூழ்கியதில், நீந்திக் கரை சேர்ந்து தப்பிய இலங்கையைச் சேர்ந்த ஒருவரைப் பொலிஸார், நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராமேஸ்வரம், மண்டபத்திலிருந்து 12ஆம் திகதி நாட்டுப் படகில் அகதிகள் சிலர் இலங்கை செல்ல முயன்றபோது, தனுஷ்கோடி கடலில் படகு கவிழ்ந்தது. இதில் இரண்டு குழந்தைகள் உட்பட ஏழு பேர் பலியாயினர்.

உயிர் தப்பிய ஆறு பேரில் மூவரை, இந்தியக் கடற்படையினர் மீட்டனர். நீந்திக் கரை சேர்ந்த மூன்று பேர் தலைமறைவாகினர். இவர்களைப் பொலிஸார் தீவிரமாகத் தேடி வந்த நிலையில், திருவண்ணாமலை அருகே புதுப்பாளையம் அகதிகள் முகாமில் மறைந்திருந்த சுமன் (வயது - 25) என்பவரை கியூப் பிரிவுப் பொலிஸார் நேற்றுமுன்தினம் பிடித்தனர்.

இலங்கை, வவுனியா மாவட்டம் மகரந்தக்குளம் பகுதியைச் சேர்ந்த சுமன் 2006ஆம் ஆண்டில் அகதியாக வந்து, திருவண்ணாமலை அகதிகள் முகாமில் தங்கியுள்ளார்.

விசாரணைக்குப்பின், மண்டபம்கடலோரக் காவல்படை பொலிஸாரிடம் சுமன் ஒப்படைக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டார். (அ-ஒ)

## கஞ்சிக்குடிசாறில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனர், இருவர் படுகாயமடைந்தனர் என்று புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் அதி சக்திவாய்ந்த கண்ணி வெடித்தாக்குதலை நடத்தினர் என்றும் அதிரடிப்படையினர் நால்வரும் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர் என்றும் புலிகள் தரப்பில் கூறப்பட்டது.

கண்ணிவெடித் தாக்குதலை அடுத்து கஞ்சிகுடிச்சாறு வனப் பகுதியை நோக்கி விசேட அதிரடிப்படையினர் தமது தளங்களில் இருந்து பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர் என்றும் இதனால் அப்பகுதி புகை மண்டலமாகக் காணப்பட்டதாகவும் மேலும் கூறப்பட்டது. (அ-சி)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டம் நடத்தப்படும்.

- இவ்வாறு தமிழர் திராவிடர்கழகம் அறிவித்துள்ளது.

திராவிடர் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை வகித்தார்.

இந்தக் கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* இலங்கை அரசுக்கு இராணுவத் தளபாடங்களை அளிப்பது, இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிப்பது போன்ற மத்திய அரசின் இந்தப்போக்கை கண்டித்தும், ஒரிசாச் சம்பவத்தைக் கண்டித்தும், வரும் 23ஆம் திகதி ரயில் மறியல் போராட்டம் நடத்துவது -என்று தீர்மானிக்கப்பட்டது. (அ-சி)

## கறம்பைக்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு படையினரும் கொல்லப்பட்டிருக் கின்றனர் என்றும் 15 படையினர் காயமடைந்துள்ளனர் என்றும் படைத்தரப்பு மேலும் தெரிவித்தது.

படையினரின் முன்னேற்ற நடவடிக்கையினை முறியடிக்க நேற்றுமாலை வரை புலிகள் மூன்று முனைகளில் கடும் எதிர்த் தாக்குதல்கள் நடத்தினர் என்றும் அதனைத் தாம் முறியடித்துவிட்டனர் என்றும் படைத்தரப்பு மேலும் அறிவித்தது. (அ-சி)

## விஷ.. வாயு ஆயுதங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்கராயன் மோதலின் போது மூச்சுத் திணறல் காரணமாக 6 இராணுவத்தினர் அனு ராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் புலிகளின் விஷவாயு கக்கும் கிரனேட் குண்டுகளாலேயே பாதிக்கப்பட்டனர் என்று கருதப்படுவதாகவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

மோதல்கள் இடம்பெறும் வேளைகளில் எதிர்த்தரப்பினரை பலவீனப்படுத்தும் வகையில் பல்வேறு நடைமுறைகள் கையாளப்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. அந்த வகையிலேயே படையினரின் உற் சாகத்தையும் பலத்தையும் முறியடிக்கும் வகையில் விடுதலைப்புலிகள் புதியதொரு நடமுறையைக் கையாண்டுள்ளனர்.-

கடந்த சில தினங்களாக கிளிநொச்சி, அக்கராயன்குளம், வன்னி விளாங்குளம் மற்றும் மேற்கு மாங்குளம் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற இருதரப்பு மோதல்களின் போது விடுதலைப் புலிகளால் மூச்சுத் திணறலை ஏற்படுத்தக் கூடிய விஷவாயுவை கக்கும் கிரனைட் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் 6படையினர் மூச்சு தினறல் ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கண்ணீர் புகைக்குண்டுகளை ஒத்ததான இந்தக் குண்டுத் தாக்குதலினால் எவ்வித உயிர்ச் சேதங்களும் ஏற்பட வில்லை. -எதிர்காலத்தில் விடுதலைப் புலிகளால் இவ்வாறான தாகுதல்கள் மேற்கொள்ளப்படலாம் என சந்தேகம் எழுந்துள்ளதால் அதனை முறியடிக்கும் வகையில் படையினரும் சுகாதாரத் துறையினரும் நடவடிக்கை எடுத்துள்ளனர்- என்றும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, இராணுவத் தலைமையகம் நேற்றிரவு விடுத்த அறிக்கை ஒன்றில் -

தென்னாசியாவில் தொழில் திறன் மிகுந்ததாக, சகல இராணுவ வளங்களும் நிறைந்ததாக கருதப்படும் ஸ்ரீலங்கா இராணுவம், எதிரியின் இரசாயன அல்லது விஷவாயு ஆயுதத் தாக்குதல்களை எதிர்கொள்ளதயார் நிலையிலேயே உள்ளது.

* குறிப்பிட்ட பகுதிகளில் நடைபெற்ற மோதல்களின் போது விடுதலைப்புலிகள் "சி.எஸ்.காஸ்" குண்டுகளைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பது நிரூபனமாகியுள்ளது. மோதல்களின் போது களத்தில் முன்னேறிய பின்னர் பாதிக்கப்பட்ட சிப்பாய்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு மேற்கொள்ளப் பட்ட வைத்திய ஆய்வுகள் அதனை நிரூபித்துள்ளன.

* சி.எஸ்.காஸ், ஆள்களை கடத்துவதைத் தடுப்பதற்கும், பணயம் வைப்பதற்கும் பயன்படுத்தும் ஒன்றாகும்.

* விடுதலைப்புலிகளின் இத்தகைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள இலங்கை இராணுவம் தயாராகவே உள்ளது.

இரசாயன அல்லது விஷவாயு ஆயுதங்களை பயன்படுத்துவது உலகலாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐ.நா.வினால் நிர்ணயிக்கப்பட்ட மரபுக்கு முரணானதாகும்- எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

2008 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம்
SCC
விசேட கணனிப் பயிற்சி நெறிகள்
SCC கல்வி நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ்களுக்கான கற்கை நெறிகளுக்கு விசேட சலுகைக்கட்டணம் வழங்குகிறது இன்றே எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்
Dip. In MS Office - 4 Months
Dip. In Desktop Publishing - 4 Months
Dip. In Internet e-mail - 2 Months
Dip. In Hardware Engineering - 4 Months
Dip. In Computer Programming - 6 Months
Dip. In Eng. Drawing & Auto CAD - 3 Months
Dip. In Computerized Accounting - 4 Months
Dip. In Data Base Management System - 4 Months
Dip. In Audio & Video Editing - 4 Months
Dip. In Visual Basic - 4 Months
Dip. In Web Designing - 4 Months
3000/=
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Batch IV 19,20.09.2008
ONLINE CLASSESக்கும் மாணவர் அனுமதிக்கப்படுவர்
Softview Computer College
55, Arasady Rd, Jaffna. T.P. 021 2225170

ஏசியன் தளபாட நிலையம்
வீட்டுப் பாவனைக்குரிய தளபாடங்கள். அலுவலக பாவனைக்குரிய தளபாடங்கள் மற்றும் பிளாஸ்ரிக் கதிரை வகைகள் அனைத்துவிதமான மெத்தை வகைகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
உள்நாடு மற்றும் வெளிநாட்டிற்கான பொதிகள், ஆவணங்கள் குறைந்த கட்டணத்துடன் மூன்று நாள்களிற்குள் பாதுகாப்பாக அனுப்பிவைக்கப்படும்.
★ லண்டன், சுவிஸ், பிரான்ஸ் - 1Kg பொதிக்கு 750/=
★ கனடா - 1Kg பொதிக்கு 850/=
தொடர்பிற்கு:
யாழ்ப்பாணத்தில்: ஏசியன் தளபாட நிலையம் 133, மின்சார நிலைய வீதி (பஸ் நிலையம் அருகில்), யாழ்ப்பாணம். T.P. 021 222 7892 asian_133@yahoo.com
கொழும்பில்: மாருதி ஏஜென்ட் வெள்ளவத்தை, கொழும்பு - 06. T.P. 077 3583879

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சுடர்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சை 2008 - மாதிரி வினாத்தாள்
General Certificate of Education (Ord.Level) Examination 2008 - Model Question Paper

| T | ஆங்கிலம் English Language | ஒரு மணித்தியாலம் One hour |
|---|---|---|
| 31 I | | |

## Answer all Questions.

**Test - 01**

Fill in the blanks with the correct pronouns given in brackets. The First one is done for you.

( in, to, by, on, at, for )

1) I welcome all of you to this meeting.
2) The meeting was held ...................... the main hall.
3) The next meeting will be ...................... 12th August.
4) Excuse me, can I disturb you ...................... a minute please.
5) The second item is address ...................... the principal.
6) The meeting started ...................... 1.30 p.m.

**Test - 02**

Complete the following dialogue. Use the words/ phrases given below. The first one is done for you.

of course they will    a good idea    what is it?
Why not    yes it is    ~~Let me think~~

Mala :- What are you doing this weekend. Leela?
Leela :- (1) Let me think. There's nothing special, Mala.
Mala :- Let's go to the flower show then, Leela
Leela :- To the flower show (2) .............................. Can we go by our selves?
Mala :- (3) ..............................
Leela :- with they admit us?
Mala :- (4) ..............................
Leela :- But
Mala :- Yes, (5) ..............................
Leela :- Don't you think it's better for us to go with guardian?
Mala :- (6) .............................. Let's ask mother, then
Leela :- I'm sure she'll come with us.

**Test - 03**

Read the text, underline the word that matches the picture. The first one is done for you.

This is a picture of a restaurant. It is situated near the (1) [~~beach~~, fair, school ] There are (2) [Three, four, five] tables in the picture. There is a man (3) [ reading, keeping, listening ] a newspaper. There is a dog (4) [ near, under, behind ] the table. There is a lady eating an (5) [apple, ice - cream, cake] There is a small boy playing with a (6) [bat, ball, boat] .There are two (7) cars, planes, boats] in the sea. There are three (8) [servants, waiters, travellers] in the restaurant. There is a man (9) [drinking, playing, smoking] (10) a [rice and curry, cigarette] The day is a (11) [cloudy, sunny, rainy] day. And they all enjoy themselves.



**Test - 04**

Read the task carefully and complete the chart. The first one is done for you.

**Desert wild life**

Desert animals can be divided into two major types, drought resisters and drought evaders. Drought evaders are animals that die when there is no rain. Drought resisters are animals that have found ways to survive during droughts. Droughts have two major challenges. The desert is very hot and very dry.

Desert Animals

- Type 1
  - 1) ..............................
  - Features
    - 3) ..............................
    - Challenges.
      - 5) ..............................
      - 6) ..............................
- Type 2
  - 2) ..............................
  - Features
    - 4) ..............................

**Test - 05**


Write a description on one of the following.

1) Perahera    2) New Year    3) Christmas

..............................

**Test - 06**

Write five sentences about the picture given:



..............................

**Test - 07**

You have received a computer as a gift from your uncle in Canada. The computer can help you with your work. Write five uses that you get from your computer. One example is given for you.

e.g :- My computer gives many informations about education.

..............................

**Test - 08**

Design a poster for a food fiesta to be held during the interval at the cultural festival. Follow the guide lines given.

* A Catchy title    *The food items to be sold    *Home made
* A wide variety - specialities of different cultures.
* Reasonably priced.

..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## English Language - II

**Two hours**

### Answer all Questions.

**Test - 09**

Underline the most suitable word that fills The blank. The first one is done for you.

The importance of the betel (1) ................ leaf .................... [ leaf, trunk, tree ] A (2) ................[ group, bunch, sheaf ] of betel is associated with every (3) ......................... [ usual, important, casual ] event of our (4) .......................[ lives, fashion, style] It is used in communicating good and (5) .......................... [ valuable, famous, bad ] news. It is also a sign of (6) ................. [ affection, function, association]

**Test - 10**

Read the following programme and answer the questions given below.

**Variety Entertainment programme.**

| | | | |
|---|---|---|---|
| 01. 9.00 a.m. | Welcome speech. | 08. 10.30 a.m. | Drama |
| 02. 9.10 a.m. | Pooja dance. | 09. 10.45 a.m. | Bharatha Dance |
| 03. 9.15 a.m. | Guitar Solo | 10. 11.00 a.m. | Slide Show |
| 04. 9.20 a.m. | Duet | 11. 11.15 a.m. | Mime |
| 05. 9.30 a.m. | Playlet | 12. 11.30 a.m. | Group Song |
| 06. 10.00 a.m. | Arabic Dance | 13. 11.45 a.m. | Speech by the chief guest |
| 07. 10.15 a.m. | Action Song | 14. 12.00 noon. | National Anthem |

End

01) What is this porgramme about?.................................................
02) At what time does it start?.................................................
03) At what time does it end?.................................................
04) What is the duration of the Playlet?.................................................
05) When does the Bharatha Dance start?.................................................

**Test - 11**

Match the sentence parts and make meaningful sentences. Write the number of the part within brackets. The first one is done for you.

**(A)**

01) If he studies hard
02) that there is a rabbit in the moon
03) when he fell off his bicycle yesterday
04) because he had a headac'
05) that I bought yesterda
06) I'm happy that
07) If I were a bird
08) by the time we reached the cinema
09) when I went to the library yesterday
10) as most of the members had not turned up
11) that there is some form of life on Mars ?

**(B)**

01) Some children believe ( 2 )
02) This is the dictionary ( )
03) Saman did't go to school yesterday ( )
04) Is it possible ( )
05) He injured his knee ( )
06) the film had already started ( )
07) the meeting was cancelled ( )
08) he will pass the examination ( )
09) you all got through the examination ( )
10) I would fly round the world ( )
11) I met saman ( )

**Test - 12**

Read the following text and underline the word that best fits for the blank. The first one is done for you.

Last year I (1) ............ ( gone, go, went) to Kandy for my holiday. I spent the first week (2) ............ ( on, at, in ) Kandy staying with a couple of friends and I took (3) ................ ( the, a, an) train to Nuwara Eliya, where (4) ............... ( he, I, me ) spent another ten days (5) ..................... ( sadly, happily, badly ). It is (6) .................. ( an, the, a ) beautiful city and I had a (7) ................. ( bad, wonderful, sad ) time. I stayed in a very (8) ...................... ( Luxurious, small, house ) hotel right in the centre, but I didn't mind spending a lot of money because it is a wonderful (9) .................. ( hotel, home, cottage ) and also very convenient. My brother was the person who recommended it. (10) .................. ( She, I, He ) goes to Nuwara Eliya a lot and he (11) ................. ( always, never, usually ) stays anywhere else.

**Test - 13**

Write on one of the following. Use about 100 words.

* My ambition * A disaster * A picnic we enjoyed

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

**Test - 14**

Your family visited your grandmother on the New year Day. Write a letter to a friend and tell him/her about your visit including the following:-

* How you went
*Who you went with
* How your grandmother welcomed you
*The presents you took
* The presents you received
*What you had for lunch
* The games you played

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

**Test - 15**

**Read the following an - imaginary visit to the North pole and answer the questions given below.**

i) It was a cold day in winter. I was sitting on the bench by my house alone. The snowflakes were falling, falling and never ended falling.

ii)Suddenly, slippery ice was beneath my feet. I slipped away, away until I got to the North Pole. The snow was deep. I couldn' t even see. I was weary and about to fall when I saw a little cottage. I knocked on the door and a little elf came out.

iii) When I went in, it was a big factory. But when you look from outside it is a small cottage. Lots of busy elves were calling out names and the things that children want.

iv) Then Santa Claus came out. He had a long white beard and a hat with a bell. He asked me. "What do you want for Christmas ? I Said, "Santa, can I have peace in my country ? " He made a disappointed face and said, " I'm sorry, but that is a thing that you and the others in your country have to do. I cannot do anything to make peace. But I can do something" He gave me two doves. He said again, "the one you give these to and you will be in peace."

v) Then I heard my mum call. "Wihangs, it's late. Get up." And all of a sudden I woke up in my bedroom. It was all a dream.

1) Say whether the following sentences are true or false by writing " T " or " F " in the space pro-vided against each sentance.
   - i) It was a sunny day ( )
   - ii)The incident was a dream ( )
   - iii) Wihanga asked for a box of chocolate for christmas ( )
   - iv) Wihanga slipped away until she got to the North pole ( )
2) Who came out from the cottage?.................................................
3) Which line says about santa claus?.................................................
4) What did Wihanga ask for christmas?.................................................
5) What did santa claus give?.................................................
6) Write to what the following words refer to in the text?
   - a) He in pragraph 4 line 2.................................................
   - b) a thing in pragraph 4 line 11.................................................
   - c) that in pragraph 3 line 7.................................................
   - d) It in pragraph 5 line 5.................................................
7) Find words from the text that have a simillar meaning to the following.
   - a) Unexpected - ..........................................
   - b) hut - ..........................................
   - c) freedom from war - ..........................................
   - d) pigeon - ..........................................

**Test - 16**

Write an article on one of the following. Use about 200 words.

a) Advantages and disadvantages of mobile phones.
b) Food preservation
   * Old methods * New methods * Why it is important ?
c) Communication then and now.
   * Different ways of communication used in the past
   * Modern means of communication
   * Communication systems in the world
d) Complete the following story
   Last sunday when I was resting in my bed, I heard someone crying so I ..........

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org